www.padippakam.com

ஜனவரி'94 மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ் விலை ரூ.3.

# புதிய கலாச்சாரம்



P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIE... SUR
SEINE FRANCE

## மாமேதை மா சே. துங்

## நூற்றாண்டு விழா

படிப்பகம்

# கேட்டீரா சேதி!



ஏர்-இந்தியா நிறுவனம் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்காக, ''கோவாவின் கடலும், நுரையும், மணலும் வெளிப்படையான இந்தியாவின் வாழ்க்கை முறைக்கு ஆதாரம்'' என்று தலைப்பிட்ட சுவரொட்டிகளை உலகெங்கும் விநியோகித்துள்ளது. இந்நிறுவனத்தின் சின்னமான 'மகாராஜா' அரை நிர்வாணக் கோலத்தில் தன்னைக் கடந்து செல்லும் அரை நிர்வாணப் பெண்களைப் பார்த்து மகிழ்வது போன்ற படமும் இச்சுவரொட்டிகளில் அச்சிடப்பட்டுள்ளது. இது 'கோவா மாநிலப் பெண்களையும் மக்களையும் கேவலப்படுத்துவதாகும்'' என எதிர்த்துப் பல பெண்ணுரிமை அமைப்புகள் போராடத் துவங்கியபின், தற்பொழுது ஏர்-இந்தியா நிறுவனம் அச்சுவரொட்டியைத் திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டது. சில மாதங்களுக்கு முன்புதான் மத்திய அரசும் கோவா மாநிலப் பெண்களை இழிவுப் படுத்தி 'கோவா: எது வேண்டுமானாலும் கிடைக்குமிடம்' என விளம்பரப்படம் எடுத்து மூக்கறுபட்டது நினைவிருக்கிறதா?

விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் மாபெரும் முன்னேற்றங்களைக் கண்டுள்ள ஜப்பான் இதுநாள் வரை தனது மொழியில் பெண் இனத்தைக் குறிக்க 'துடைப்பத்தை ஏந்துபவள்' எனப் பொருள் தரும் 'ப்யூஜின்' எனும் வார்த்தையையே அதிகாரப்பூர்வமாகப் பயன்படுத்தியுள்ளது. பெண்ணுரிமை அமைப்புகளின் நீண்டநாள் போராட்டத்திற்குப் பின்னே சமீபத்தில்தான் இச்சொல்லிற்குப் பதிலாக 'பெண்ணினம்' எனப் பொருள்தரும் வேறொரு சொல்லை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக ஜப்பானிய பெண்கள், 'தங்கள் பெயருடன் கணவனின் பெயரையும் சேர்த்துத்தான் கண்டிப்பாக எங்கும் பயன்படுத்த வேண்டும்' எனும் வழக்கத்தை அங்கீகரித்துள்ள அரசின் நடைமுறையை எதிர்த்துப் போராடத் துவங்கியுள்ளனர்.

சுத்தி-அரிவாள் சின்னத்துக்குப் பதிலாக ஜார் காலத்திய இரட்டைத் தலையுடைய கழுகு சின்னத்தையே ரசிய அரசு முத்திரையாக இனி பயன்படுத்தப் போவதாக முடிவு செய்துள்ளது யெல்ட்சின் கும்பல். பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின் எடுத்த முடிவுகளில் இதுவும் ஒன்று. 'தற்போதைய சமூகச் சூழலுக்குப் பொருந்தாதென்றாலும், தமது வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கட்டியங் கூறும் விதமாக இச்சின்னத்தைத் தேர்ந்தெடுத்துள்ளதாக' விளக்கமளித்துள்ளனர். முதலில் ஜாரின் கொடி; இப்பொழுது ஜாரின் சின்னம்; இனி வெளிப்படையாக ஜாரின் வாரிசுகள் என அழைத்துக் கொள்ள வேண்டியதுதான் பாக்கி.

'அயோத்தியில் இராமர் கோவில் கட்டுவதற்காக ராவ் அரசு பேச்சு வார்த்தை நடத்திவரும் சங்கராச்சாரியார்கள் நால்வரும் சிவனை வழிபடுபவர்கள்; இராமரோ வைஷ்ணவர்களின் கடவுள். எனவே சங்கராச்சாரியர்கள் கோவில் பிரச்சனையில் தலையிடக்கூடாது' - இப்படி பேசியிருப்பவர் வேறு யாருமல்ல; இராமர்கோவிலைக் கட்ட வி.இ.ப. ஆல் அமைக்கப்பட்டிருக்கும் இராம ஜன்ம பூமி நியாஸின் தலைவர் இராமச்சந்திர மரமஹெம்ஸ். பார்ப்பனர்களுக்குள்ளேயே இந்தப் பிளவு. அதையும் தாண்டி 'இந்துக்கள் அனைவரும் ஒன்று' என்ற போலிக் கூப்பாடு எதற்கு?

அமெரிக்காவில் புதுப்புது வழிகளில் தற்கொலை செய்து கொள்வது அதிகரித்து வருகிறது. அதிலொன்று பிளாஸ்டிக் பைகளைக் கொண்டு மூச்சுத்திணறி இறந்து போதல். இதற்கு காரணம் எளிதாகத் தற்கொலை செய்து கொள்வது எப்படி என்பதை விளக்கும் 'இறுதி வழி' எனும் நூல்தான். அதிகாரிகளும் இதை ஒப்புக் கொள்கின்றனர். அதோடு 'தற்கொலை செய்து கொள்ளும் வழிமுறைதான் மாறியுள்ளதே தவிர, எண்ணிக்கை கூடாமல் இருப்பது நல்ல செய்தி' என அறிக்கைவிடுகின்றனர். நூலாசிரியரோ பரபரப்பான விற்பனையில் மகிழ்ந்து போயுள்ளார். வாழ்க அமெரிக்க மாடல் 'ஜனநாயகம்'!

நடந்து முடிந்த வடமாநிலத் தேர்தல்களில் காங்கிரசும் பா.ஜ.க.-வும் பிரச்சாரத்திற்காக அதி நவீன முறைகளைப் பயன்படுத்தியுள்ளதுடன், ஹிட்லர் எழுதிய 'மெயின் கேம்ப்' எனும் நூலையும் பிரச்சாரப் பணிக்காகத் தேர்ந்து எடுத்துள்ளன. இந்நூலின் 'பிரச்சாரம்' என்ற பகுதியை மட்டும் பிரதி எடுத்துத் தங்களது வேட்பாளர்களுக்குக் கொடுத்துள்ளனர். கோயபல்ஸ் பாணியில் புளுகுவதில் கூட பாசிஸ்டுகளுக்கிடையே என்னே ஒற்றுமை!



கடந்த அக்டோபரில் நடந்த நிகழ்ச்சியொன்றில் ப்யூர்டோ ரீகா தீவுக் கூட்டத்தின் தேசியக் கொடியைக் கேவலப்படுத்தும் விதமாக தனது பாலுணர்வு வக்கிர நடனக் காட்சியில் பயன்படுத்தியுள்ளார் சர்வதேச சீரழிவு கலாச்சாரத்தின் பிரதிநிதி மடோனா. இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்காவில் வாழும் அத்தீவு மக்கள் மடோனா வீட்டின் முன் கூடி, 'வெட்கங்கெட்ட மடோனாவே மரியாதையாக நடந்து கொள்' என முழக்கமிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

மகாராஷ்டிரா மாநிலம் அம்பேரி கிராமத்தில் வளர்ந்துள்ள சாதாரண மரம் எதையும் கொடுக்கும் அற்புத 'கற்பக விருட்சம்' என்ற வதந்தி பரவி அக்கிராமம் தற்பொழுது மிகப்பெரிய யாத்திரை ஸ்தலமாக மாறிவிட்டது. தாவரவியல் விஞ்ஞானிகள் ஆராய்ந்து 'எந்த அற்புத சக்தியும் அம்மரத்திற்குக் கிடையாது' என அறிவித்துள்ளனர். ஆனால் மாநில அரசோ மக்களின் மூட நம்பிக்கையை அகற்ற முயற்சி செய்யாது, அக்கிராமத்திற்கு சிறப்புப் பேருந்துகளை விட்டிருப்பதுடன், மரத்தை வளர்த்த சன்னியாசியின் பெயரையே அக்கிராமப் பேருந்து நிலையத்திற்கும் சூட்டி மக்களை மேலும் முட்டாளாக்கி வருகிறது.

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் 'மலட்டுத் தம்பதியர் யாரெனும் 10.000 டாலர் தந்தால் அவர்களுக்குத் தான் குழந்தை பெற்றுத் தருவதாக' பத்திரிகைகளில் விளம்பரம் செய்துள்ளார். மலட்டுத் தம்பதியருக்கு உதவுவது என்பதைவிடத் தனது மேல்படிப்புக்கான செலவை ஈடுகட்டத்தான் இம்முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார் இவர். இதுதான் 'செல்வந்த' அமெரிக்காவின் கோர லட்சனம்.

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

● போர்: 11
● குரல்: 6-8
● நவ.-டிச.'93, ஜன.'94

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3
ஆண்டுச் சந்தா: ரூ.36

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 8.5

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

ஆர்.சீனிவாசன்,
15, செங்குன்றம் சாலை,
வில்லிவாக்கம்,
சென்னை-600 049.

## தேர்தல் முடிவுகள்:

# போலிகள் ஜாக்கிரதை!

வட மாநிலத் தேர்தல் முடிவுகள் பாரதிய ஜனதா கும்பலின் தலையில் பேரிடியாக இறங்கியிருக்கின்றன. 'குட்டி பொதுத்தேர்தல்' என்றும், பாபர் மசூதி இடிப்பு பற்றி மக்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்கவிருக்கும் தேர்தல் என்றும், அநீதியான ஆட்சிக்கலைப்புக்கு எதிராக மக்கள் நீதி வழங்கவிருக்கும் தேர்தல் என்றும் திமிர்த்தனமாகப் பிரச்சாரம் செய்த பாரதிய ஜனதா இப்போது எல்லா ஓட்டுக்கட்சிகளையும் போலவே, 'மீசையில் மண் ஒட்டவில்லை' என்ற பாணியில் சமாளிக்க முயல்கிறது. இந்த சமாளிப்பு முயற்சிகளை முதலாளித்துவப் பத்திரிகைகளேகூட எள்ளி நகையாடுகின்றன. ''மதசார்பின்மைக்கு வெற்றி! இந்துத்துவத்திற்குத் தோல்வி'' - என்ற திட்டவட்டமான தீர்ப்பை மக்கள் வழங்கிவிட்டார்கள் என்று குதூகலிக்கின்றன மற்ற ஓட்டுக்கட்சிகள்.

ஆனால் மதசார்பின்மையின் வெற்றியைப் பற்றிப் பேசுவதற்கு இவர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது? சென்ற டிசம்பர் - 6 ம் தேதியன்று, பாபர் மசூதி இடிப்பைக் கண்டித்தும், இந்துத்துவத்தை எதிர்த்தும் பிரச்சாரம் செய்வதற்குக் கூட இவர்கள் அனுமதிக்கவில்லை. மதசார்பற்ற சக்திகளை நசுக்குவதில் பார்ப்பன ஜெயலலிதா கும்பல்தான் மிகவும் தீவிரம் காட்டுகிறது. டிசம்பர் 6-ம் தேதியன்று கண்டனப் பொதுக் கூட்டம் நடத்த எந்த அமைப்பும் அனுமதிக்கப்படவில்லை. சட்டம் - ஒழுங்கையும், மத நல்லிணக்கத்தையும் 'காப்பாற்றுவதற்காக' மதசார்பற்ற சக்திகளை நசுக்கியிருக்கிறது ஜெ. அரசு.

பொதுக்கூட்ட அனுமதி கோர காவல் நிலையம் சென்ற கோவை ம.க.இ.க. செயலர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்; திருச்சியில் புரட்சிகர மாணவர் இளைஞர் அணித் தோழர்கள் 6 பேரையும் வேலூர் ம.க.இ.க. செயலரையும் கைது செய்து பொய்வழக்கு போட்டுள்ளது காவல் துறை. மசூதி இடிப்பை எதிர்த்துக் கண்டனச் சுவரொட்டி ஒட்டியதற்காக பெரியார் மாவட்டம் வெள்ளித்திருப்பூரைச் சேர்ந்த விவசாயிகள் விடுதலை முன்னணித் தோழர்கள் மீது 124-A பிரிவின்கீழ் ராஜத்துரோக வழக்கு போடப்பட்டுள்ளது. முற்போக்கு இளைஞர் அணித் தோழர்கள் 3 பேர் தேசியப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். மொத்தத்தில் புரட்சிகர இயக்கங்களும், சில மதசார்பற்ற, ஜனநாயக சக்திகளும் மட்டுமே இந்துத்துவத்திற்கு எதிரான போராட்டத்தில் அக்கறை காட்டியுள்ளன.

மார்க்சிஸ்டு கட்சியினரோ ''கடவுளின் பேரால் கலவரம் வேண்டாம்'' என்ற பேடித் தனமான முழக்கத்தின்கீழ் 'இந்து மதவெறி, ஆர்.எஸ்.எஸ்.' போன்ற சொற்களைக் கூடத் தவறியும் பயன்படுத்தாமல், பார்ப்பன இந்து மதவெறிக் கும்பலின் மனம் நோகாமல் பிரச்சாரம் செய்தனர். தங்கள் உட்கட்சி விவகாரத்தில் மோதிக் கொண்டிருக்கும் தி.மு.க.வும், தனக்கிழைக்கப்பட்ட அநீதிக்காக தமிழகம் முழுவதும் நீதி கேட்டுக் கொண்டிருக்கும் வை.கோ.வும் மக்கள் எதிர்நோக்கியிருக்கும் அபாயத்தைப் பற்றி சிறிதும் அக்கறை கொள்ளவில்லை.

பாரதிய ஜனதாவின் பார்ப்பன, மேல்சாதி முகத்தை ஓரளவு அம்பலப்படுத்தி, அதன் விளைவாக முஸ்லீம்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்குகளைப் பெற்று உத்திரப்பிரதேசத்தில் ஆட்சியைப் பிடித்திருக்கும முலாயம்சிங் யாதவ், கன்சிராம் ஆகியோரும், நாற்காலியைத் தக்கவைத்துக் கொள்ளும் நோக்கத்தில், ஓட்டுக்கட்சிகளுக்கேயுரிய சந்தர்ப்பவாதமான பாணியில் பேசுகின்றனர். 'பாபர் மசூதி பிரச்சினைக்கு என்ன தீர்வு' என்ற கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் ''அயோத்தியிலேயே பாரதிய ஜனதா தோல்வியடைந்து விட்டதே அதிலிருந்தே தெரியவில்லையா'' என்று மழுப்புகின்றனர்.

தேர்தலில் பாரதிய ஜனதா மண்ணைக் கவ்வியிருப்பது உண்மைதான். ஆனால், வெறும் வாய்ச் சவடால்கள் மூலமோ, தேர்தல்கள் மூலமோ, பார்ப்பன இந்துமத வெறிக்கும்பலை வீழ்த்திவிட முடியாது. ஏனென்றால் தன்னுடைய பாசிச சித்தாந்தத்திற்கு, அது ஒரு மக்கள் திரள் அடிப்படையை உருவாக்கியிருக்கிறது. அதனை விரிவான பிரச்சாரம் மற்றும், மக்கள் திரள் போராட்டங்கள் மூலம் மட்டும் தான் முற்றாக வீழ்த்த முடியும்.

தேர்தல் தோல்வியினால் மூக்கறுப்பட்டும், அத்வானி கைது செய்யப்பட்ட விவகாரத்தை பெரிது படுத்த இயலாமல் தோல்வியடைந்தும் போன பாரதிய ஜனதா மீண்டும் அரசியல் அரங்கில் ஒரு சக்தியாக எழுவதற்கு முயற்சி செய்கிறது. ஜனதா தளம் ஏறக்குறைய துடைத் தெறியப்பட்டுவிட்டதால், காங்கிரசுக்கு மாற்றான ஒரே 'தேசிய' எதிர்க்கட்சி என்ற தகுதியிலிருந்து அது தனது அரசியல் நடவடிக்கைகளைத் திட்டமிடுகிறது. டங்கல் திட்டம் அமல் செய்யப்படுவதன் விளைவாக தோன்றுகின்ற பொருளாதார நெருக்கடிகளையும், மக்களின் அதிருப்தியையும் அது தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள நிச்சயமாக முயற்சிக்கும்.

பாபர் எதிர்ப்பு தேசீய நாயகனாக சித்தரிக்கப்பட்ட இராமன், டங்கல் எதிர்ப்பு தேசீய நாயகனாக சித்தரிக்கப்படக்கூடும். இந்த பார்ப்பன பனியா கும்பலின் ஏகாதிபத்திய எதிர்ப்பு பித்தலாட்டங்கள் நாம் அறிந்தவைதானெனினும் தனது பிரச்சார, பத்திரிக்கை பலம் மக்களின், அதிருப்தி இவற்றை ஒருங்கிணைத்து தனக்கு ஆதரவாக அதை மாற்றிக் கொள்ள பாரதிய ஜனதாவால் இயலும். பாரதிய ஜனதாவிற்கு எதிராக தற்போது மக்கள் தீர்ப்பளித்துள்ள போதிலும் அதனை பயன்படுத்திக் கொண்டு இந்து மத வெறி எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் ஆற்றலோ விருப்பமோ மற்ற ஓட்டுக் கட்சிகளுக்கு இல்லையென்பதையே இந்த டிசம்பர் 6 நடப்புகள் நிரூபிக்கின்றன. புரட்சிகர, ஜனநாயக இயக்கங்களின் பொறுப்பை இந்த நிலைமை மேலும் அதிகமாக்குகிறது. ●

படிப்பகம்

www.padippakam.com

# தமிழிசை மரபு சில குறிப்புகள்

தமிழ் இசை மரபை இருட்டடிப்பு செய்து பார்ப்பனியம் மற்றும் வடமொழி சார்ந்த 'கர்நாடக இசை' மரபே தமிழகத்தின் செவ்வியல் இசை மரபு என பிரச்சாரம் செய்யப்படுகிறது. இது அப்பட்டமான பொய் என்பதைத் தஞ்சையைச் சேர்ந்த இசையறிஞர் ஆபிரகாம் பண்டிதர் இந்த நூற்றாண்டின் துவக்கத்திலேயே நிரூபித்தார்.

1917-இல் வெளியிடப்பட்ட அவரது கருணாமிருத சாகரம் என்னும் இசை ஆய்வு நூல் இவ்வுண்மையை ஆணித்தரமாக நிறுவுகிறது. இசைக்கல்லூரிகளிலோ, இசைவிழாக்களிலோ இதுபற்றி மூச்சும் விடப்படுவதில்லை.

இதுவன்றி திரு. மு.அருணாசலம் அவர்கள் எழுதிய கருநாடக சங்கீதம், தமிழிசை ஆதி மும்மூர்த்திகள் என்ற நூலும், இசையறிஞர் ப. தண்டபாணி அவர்களின் 'திராவிடர் இசை' எனும் நூலும் மேலும் பல அறிஞர்களின் ஆய்வு நூல்களும் இதனை நிரூபிக்கின்றன.

மேற்சொன்ன ஆதாரங்களிலிருந்து நமது வாசகரொருவர் தொகுத்தனுப்பிய விவரங்களை கீழே தருகிறோம்.

### இசை மட்டுமல்ல கருவிகளும்

தமிழ் இசை வெறும் வாய்ப்பாட்டு மட்டும் அல்ல. தமிழிசைக்குப் பயன்படும் இசைக்கருவிகள் கூட தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்குமே உரிமையாயிருந்து இன்று இந்தியா முழுவதுக்கும் ஏன் உலக நாடுகளுக்கும் பரவியிருக்கின்றன. இவை யாவற்றுக்கும் அடிப்படையாகக் குழல், யாழ், முழவு என்னும் மூன்று கருவிகளே சான்றாக உள்ளன. இம்மூன்றும் தோன்றி வளர்ந்து வாழ்ந்து வரும் இடம் தமிழகமேயாகும். இன்று இவை பல நூறு இசைக் கருவிகளாக பல்கிப் பெருகியுள்ளன.

### பரதர் நூலில் ஆதாரம்

''தென்னிந்திய மக்கள் பற்பல நடனங்களிலும் வாய்ப்பாட்டிலும் வாத்திய சங்கீதத்திலும் தனிப்பட்ட கலையார்வம் காட்டுகிறார்கள். அவர்களின் கலைகளில் அழகும் மதுரமும் முக்கிய அம்சங்களாக விளங்குகின்றன. அவர்களின் சாமர்த்தியமான அபிநயங்கள் பொலிவுடன் விளங்குகின்றன. இவ்வாறு நுண்கலைகள் உலவும் நாடானது வடக்கே விந்திய மலையாலும் மற்ற மூன்று திசைகளில் கடலாலும் சூழப்பட்டுள்ளது'' பரதர் எழுதிய நாட்டிய சாஸ்திரம் 5-ம் நூற்றாண்டு.

பண்டைக்காலத் தமிழகத்தில் பண் இசைப்போரைப் பாணர் என்றும் பெண்டிரைப் பாடினி என்றும் குறித்தனர். இசைப்பாடல்களைப் பாடியவர்கள் இசைப்பாணர் என்றும் யாழ் இசைத்தவர் யாழ்ப்பாணர் என்றும் அழைக்கப்பட்டனர். நடனமாடிய பெண்கள் விறலியர், கூத்தியர் என்று அழைக்கப்பட்டனர் என தமிழிலக்கிய நூல்கள் தெரிவிக்கின்றன. வடமொழியாளர் இசை பாடியதாகவோ நடனமாடியதாகவோ பழம் நூல்களில் குறிப்பு இல்லை.

### தமிழ்ப் பண்கள்

நிலத்தை உழுது பயிரிடும்போதும் உணவுக்காக நெல்லைக் குற்றும்போதும் சுமை சுமந்து செல்லும்போதும் களைப்பின்றி நடக்கவும் ஆணும் பெண்ணும் பாடினர். தோட்டத்தில் குருவியோட்ட ஆலோலப்பாட்டு பாடினர். அறுபடையிட்டு பொங்கலிட்டு ஆண்களும் பெண்களும் அகமகிழ்ந்து ஆடிப்பாடினர். நெடுஞ்சாலையில் வண்டிப் பயணத்தின்போது தென்பாங்குப்பாட்டு (தெம்மாங்கு) பாடி பயமின்றி பயணம் செய்தனர்.

தொன்றுதொட்டு பாடி வந்துள்ள தமிழ் இசைப்பாட்டு வகைகளில் சில: அக்கைச்சி, அச்சோ, அப்பூச்சி, அம்மானை, ஆற்றுவரி, இம்பில், உந்தியார், ஊசல், எம்பாவை, கப்பற்பாட்டு, கழல், சந்துகவரி, சாக்கை, காளம், கானல்வரி, கிளிப்பாட்டு, குணலை, குதம்பை, குயில் குரவை, குறத்தி, கூடல், கொச்சகச்சார்த்து, கோத்தும்பி, தோழிப்பாட்டு, சங்கு சாயல்வரி, சார்த்துவரி, சாழல், செம்போத்து, தச்சராண்டு, தச்சாண்டி, தாலாட்டு, திணைநிலைவரி, திருவங்கமாலை, திருவந்திக்காப்பு, தெள்ளேணம், தோளேடக்கம், நிலைவரி, நையாண்டிஎா, பகவதி, படைப்புவரி, பந்து, பல்லாண்டு, பல்லி, பள்ளியெழுச்சி, பாம்பாட்டி, பிடாரன், பொற்சுன்னம், மயங்கு திணை நிலைவரி, முகச்சார்த்து, முகமில்வரி, முகவரி, மூரிச்சார்த்து, வள்ளைப்பாட்டு, சிந்து, நொண்டிச்சிந்து, கும்மி, கோலாட்டம், ஆனந்தக்களிப்பு, கீர்த்தனம் முதலியன.

நாடோடி இசைப்பாடல் வகைகள்: உழவுப்பாட்டு, ஓடப்பாட்டு, நலங்கு, ஆரத்தி, ஊஞ்சல், புதிர்ப்பாட்டு, பழமொழிப் பாட்டு, கோமாளிப்பாட்டு, ஏற்றப்பாட்டு, இறவைப்பாட்டு, காவடிப்பாட்டு, கப்பற்பாட்டு, படையெழுச்சி, தாலாட்டு, கல்லுளிப்பாட்டு, கவணெறிப்பாட்டு, பாவைப்பாட்டு, வைகறைப்பாட்டு, மறத்தியர் குறத்தியர் பாட்டுகள், பள்ளுப்பாட்டு, புலகடைப்பாட்டு, வள்ளைப்பாட்டு, பிள்ளைப்பாட்டு முதலியன.

### பார்ப்பனப் புரட்டு

பதின்மூன்றாம் நூற்றாண்டில் சாரங்க தேவர் என்பவரால் இயற்றப்பட்ட ''சங்கீத ரத்னாகரம்'' என்ற நூலே குறிப்பிடத்தக்க வடமொழியில் இயன்ற இசையிலக்கண நூலாகும். தமிழ்நாட்டில் வளர்ந்திருந்த இசையை நன்கு பயின்ற பின்னர் அந்நூல் இயற்றப்பெற்றுள்ளது. அந்நூலில் சாரங்க தேவர் இந்தளம், காந்தாரப்பஞ்சமம், நட்டராகம், பஞ்சமம், தக்கராகம், தக்கேசி, நட்டபாடை, கௌசிகம், செவ்வழி, செந்துருத்தி, தேவாரவர்த்தினி, காந்தாரம், குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி முதலிய தமிழ்ப்பண்களைக் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்பதாம் நூற்றாண்டில் மதங்க முனிவர் இயற்றிய பிருகத் தேசி என்னும் நூலிலும் தமிழ்ப் பண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

13-ம் நூற்றாண்டுக்குப்பின் தமிழ்நாட்டிலேயே இசை இலக்கண நூல்கள் வடமொழியில் எழுதும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. தமிழகத்தின் ஊர்ப்பெயர்களை வடமொழியில் கும்பகோணம் (குடமூக்கு), வேதாரண்யம் (மறைக்காடு), விருத்தாசலம் (பழமலை) என்று மாற்றியதைப் போலவே திட்டமிட்டு இசைத்துறைக் கலைச் சொற்களை வட சொற்களாகக் காட்ட ஆரியர் முற்பட்டனர்.

படிப்பகம்

www.padippakam.com

தமிழ்நாட்டில் பிறந்து தமிழையே தாய்மொழியாகக் கொண்டிருந்தும் ஆரியர் தாம் பயின்ற இசை முறைகளையும் இசையிலக்கணங்களையும் தமிழ் மொழியில் எழுதாது வஞ்சகமாய் வடமொழியிலேயே எழுதி வைத்தனர்.

17-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தஞ்சை மன்னரிடம் அமைச்சராய் இருந்த கோவிந்த தீட்சிதர் ''சங்கீத சுதா'' என்னும் இசை நூலை வடமொழியில் இயற்றினார். இவருடைய இரண்டாவது மகன் வேங்கடமகி இராகங்களைப் புதியதொரு முறையில் வரிசைப்படுத்தி ''சதித்தண்டிப் பிரகாசிகை'' என்னும் நூலை எழுதினார். தமிழ் நாட்டில் வழங்கி வந்துள்ள இசைமுறையை சில திரிபுகளுடன் அந்நூலில் எழுதி வைத்துள்ளார். எனினும் அதை தமிழில் எழுதாமல் வடமொழியிலேயே எழுதினார். இதில் இசைத்துறையில் வழக்கிலிருந்த தமிழ்ச் சொற்களையும் இராகங்களின் தமிழ்ப்பெயர்களையும் பெரும் அளவில் இருட்டடிப்பு செய்துவிட்டார்.

இந்த ஆரிய இருட்டடிப்பு குறித்து இசைப்பேரறிஞர் மு. ஆபிரகாம் பண்டிதர் தனது கருணாமிர்த சாகரம் என்னும் இசை நூலில் குறிப்பிடுவது:

''பூர்வம் தமிழ் மக்கள் சுரங்களையும் சுருதிகளையும் இராகம் உண்டாக்கும் விதிகளையும் அனுசரித்துப்பாடி வந்த 12,000 ஆதி இசைகளும் அவற்றின் பரம்பரையிலுதித்த இராகங்களும் பாடப்படும் வேறு பெயர்களால் அழைக்கப்பட்டும் அந்நிய பாஷைச் சொற்களால் உருவமைந்தும் நாளது வரையும் வழங்கி வருகின்றன. தமிழில் வழங்கும் அநேக வார்த்தைகளைத் தங்கள் பாஷையில் முதல் முதல் இருந்ததாக மற்றவர் நினைக்கும்படி காலாகாலங்களில் மாற்றி, மாற்றியதற்கிணங்க நூல்களும் புராணங்களும் கட்டுக்கதைகளும் செய்து பரப்பி வந்தார்கள். அவர்கள் சொன்னதையெல்லாம் நம்புகிறவர்கள் ஏற்பட்டபின் சமஸ்கிருத பாஷையின் அநேக வார்த்தைகள் தமிழில் வந்து வழங்க தலைப்பட்டன. இதை விவேகிகள் அறிவார்கள். அதிகம் சொல்ல இங்கு அவசியமில்லை. இயல் இசை நாடகமென்னும் முத்தமிழில் உள்ள இசைத்தமிழாகிய சங்கீதத்தைத் தென்னாட்டிலிருந்தே மற்றவர்கள் கொண்டு போனார்கள் என்பது பற்றியும் வடபாஷைக்காரரும் தமிழ் நாட்டிலிருந்தே இசைத்தமிழைக் கொண்டு போயிருக்க வேண்டும் என்பது பற்றியும் இங்கு எழுத நேரிட்டது''.

கடந்த 200 ஆண்டுகளுக்குள்ளாகத் தான் ஆரியர் தென்னிந்திய இசைமுறைக்கு ''கருநாடக சங்கீதம்'' என்ற பெயரைச் சூட்டியுள்ளனர். 20-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் தமிழ்நாட்டு நடனக்கலைக்குப் பரத நாட்டியம் என்னும் புதிய பெயரைச் சூட்டி அது நிலை பெற்றுவிட்டது போலவே சென்ற நூற்றாண்டு தொடக்கத்தில் தமிழிசை முறைக்கு ''கருநாடக சங்கீதம்'' என்ற பெயரிட்டு நிலை நிறுத்தியுள்ளனர்.

## ச,ரி,க,ம,ப,த,நி

ஏழிசைக் குறியீட்டு எழுத்துக்கள் சரிகமபதநி ஏழும் தமிழ் எழுத்துக்களே. சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பு வடமொழியில் ''சங்கீத ரத்னாகரம்'' எனும் இசை நூலை எழுதிய சாரங்கதேவர்தான் தமிழிசை முறையில் சரிகமபதநி என்னும் ஏழு தமிழ்க்குறியீடுகளுக்கும் வடமொழிப் பெயர்களை வலிந்து கொடுத்து அந்த ஏழு சுரங்களும் வடமொழியிலிருந்து வந்தன எனும் பெரும்புரட்டை ஏற்படுத்தினார். தமிழ் 'ச'வுக்குப் பதிலாக வடமொழி 'ஸ'வை வலிந்து திட்டமிட்டுப் பயன்படுத்தினார்.



ஆபிரகாம் பண்டிதர்

இப்புரட்டினை மறைத்திரு நாராயண சாஸ்திரிகள் கீழ்கண்டவாறு வன்மையாகக் கண்டித்துள்ளார்.

''சாரங்கதேவர் விவரித்த சரிகமபதநி என்கிற ஏழு சுரக்குறிகள் காரணப் பெயருள்ளவைகளென்பது, இடுகுறிப்பெயர்கள் என்று மெய்ப்பித்து விளக்குகிற சிகண்டி மாமுனிவர் அருளிச் செய்த இசை நூலுக்கு விரோதப்படுகின்றது. அன்றியும் ஷட்ஜா என்ற பதத்திலிருந்து 'ஸ'வும், ருஷப என்கிற பதத்திலிருந்து 'ரி'யும், காந்தார என்கிற பதத்திலிருந்து 'க'வும், மத்திம என்கிற பதத்திலிருந்து 'ம'வும், பஞ்சம என்கிற பதத்திலிருந்து 'ப'வும், தைவத என்கிற பதத்திலிருந்து 'த'வும், நிஷாத என்கிற பதத்திலிருந்து 'நி'யும் வந்தனவென்று உரைக்கில் 'ஷ' என்கிற சமஸ்கிருத அட்சரம் 'ஸ' என்கிற மாறுதலை அடைவதற்கும், 'ரு' என்கிற சமஸ்கிருத உயிரெழுத்து 'ரி' என்று சமஸ்கிருத மெய்யெழுத்தாக மாறுகிறதுக்கும், 'கா' என்கிற தீர்க்கம் 'க' என்று குறுகுவதற்கும், தைவத என்பதில் 'த' என்று அகர வடிவமைந்து வருவதற்கும் யாதொரு சமஸ்கிருத வியாகரண பிரமாணம் காண முடியாமையாலும், ஷட்ஜா முதலிய ஏழு பதங்களும் காரணச் சொற்கள் என்று காட்டுவதற்காக 'ரிஷப, காந்தார, தைவத' என்கிற மூன்று பதங்களின் பொருள் ஆராய்ச்சியில் சுரங்களைச் சம்பந்தித்தவைகளாகவே சாரங்கதேவர் விவரிப்பதால் ஷட்ஜ, மத்திம, பஞ்சம, நிஷாத என்கிற உரைகள் சுரங்களையே சம்பந்தித்ததெனக் கூறுவது கிரமமில்லாமையும் அபந்நியாயத்தையும் ஷண்ட, ருதம், காத்ரம், மதுரம், பட்டலம், தைரியம் முதலான சமஸ்கிருதப் பதங்களில் முதல் அட்சரமாக அதிப்பிரசிங்கிப்பதாலும் திராவிடர்கள் அமைத்த இடுகுறிப்பெயரை மாற்றுவதற்கெடுத்த புரட்டு என்று தீர்மானிக்கப்படுகிறது''.

## கீர்த்தனைக்கு முன்னால் தேவாரம்

கீர்த்தனை வகை இசைப்பாடல்கள் தேவாரகாலத்தில் தோன்றியது. கீர்த்தனத்தில் நிரவல் விருத்தி முதலிய இசையமைப்புகள் எல்லாம் தேவாரப் பாடல்களைக் கொண்டே அமைந்தவை. தியாகையர் கீர்த்தனங்களின் இசையமைப்பானது தொடக்கத்தில் பெரும்பாலும் எளிமையாகவே இருந்தது. பின்னாளில் ஆங்காங்கு பாடிய இசை வல்லுனர்களே நூற்றுக்கணக்கான கீர்த்தனங்களின் இசையமைப்பில் விருத்திகளைப் புகுத்தி வளர்த்து வந்துள்ளனர்.

தியாகய்யரின் கீர்த்தனங்களை (கொச்சையான தெலுங்குப் பாடல்கள்) அவருடைய தெலுங்கு மொழி தெரியாமல் சங்கீத வித்துவான்கள் கற்று கச்சேரி செய்ய ஆரம்பித்த பிறகு மொழிக் கொலையும், சங்கீதக் கொலையும் விளைந்தன. இதைக் கண்டு சுப்பிரமணிய பாரதியார் புலம்பியது பின்வருமாறு:

''இசைஞானமில்லாதபடி பல்லவிகளும் கீர்த்தனங்களும் பாடுவோர் சங்கீதத்தின் உயிரை நீக்கிவிட்டு வெற்றுடலை அதாவது பிணத்தைக் காட்டுகிறார்கள். இக்காலத்தில் சங்கீத வித்துவான்களிலே பலர் சங்கீதத்துக்கும் நவரசங்களே உயிர் என்பதை அறியாதவர்''

''முக்காலே மும்மாகாணி வித்துவான்

படிப்பகம்

www.padippakam.com

களுக்கு இந்த கீர்த்தனங்களின் அர்த்தம் தெரியாது. எழுத்துக்களையும் பதங்களையும் கொலை செய்தும் விழுங்கியும் பாடுகிறார்கள். அர்த்தமே தெரியாதவனுக்கு ரசம் தெரிய நியாயமில்லை''.

''நானும் பிறந்தது முதல் இன்றுவரை பார்த்துக் கொண்டே வருகிறேன். பாட்டுக் கச்சேரி தொடங்குகிறது: ''வாதாபி கணபதிம்' என்று ஆரம்பஞ் செய்கிறார். 'ராம நீ சமான மெவரு', 'மரியாத காதுரா', 'வரமு சொசகி'.. அய்யய்யோ அய்யய்யோ ஒரே கதை.''

— பாரதியார் மேலும் எழுதிக் கொண்டே போகிறார்.

### ஆதி மும்மூர்த்திகள்!

தியாகையர் (1767-1847), சியாமா சாஸ்திரிகள் (1762-1827), முத்துசாமி தீட்சிதர் (1776-1835) ஆகிய இம்மூவருமே கருநாடக இசை மும்மூர்த்திகள் என்று போற்றப்படுகிறார்கள். இம்மூவரும் திருவாரூரில் பிறந்தவர்கள். இம்மூவருடைய சங்கீதமும் அன்னிய மொழிகளில்தாம். பரந்துபட்ட மக்களுக்குப் புரியாத மொழிப் பாடல்களே ஆகையால் இவர்களுடைய சங்கீதம் வாழ்க்கையில் சமூகத்தில் மேல்நிலையில் உள்ளவர்களுக்கே உரியதாய் இருந்து வந்துள்ளது.

இராமப்பிரமத்தின் புதல்வரான தியாகையர் தெலுங்கு நாட்டுக்குப் போனதில்லை. தெலுங்குப் பாட்டைக் கேட்டதில்லை. கேட்டதெல்லாம் தமிழ்நாட்டில் தமிழ்ப்பாட்டு. தமிழ் இசை முறை. ஆறுகாலங்களிலும் நாதஸ்வர வாத்திய இசை, தேவார இசை அவ்வளவே. அவருக்கு முன்பு தமிழ்நாட்டில் வாழ்ந்த சங்கீத வித்துவான்களுடைய இசையையும் அவர் கேட்டிருந்தார். இவ்வாறு பெற்ற இசையறிவை தெலுங்கு இசைப்பாடல்களாக இயற்றினார்.

தியாகையர் தல்லப்பாக்கம் அன்னமையாவிடமும் (1424-1503) புரந்தர தாசரிடமும் (1484-1564) இசை கற்றார் என்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும். ஏனெனில் தியாகையரின் காலம் (1767-1847) மேற்கூறிய இருவரின் காலத்துக்கு மிகவும் பிற்பட்டதாகும்.


இம்மும்மூர்த்திகளுக்கும் மிக முந்திய காலத்தில் தமிழிலேயே கீர்த்தனைகளை இயற்றி தமிழிசையை வளர்த்தவர் மூவராவார். அவர் சீர்காழி முத்துத்தாண்டவர் (1525-1625), சீர்காழி அருணாசலக் கவிராயர் (1711-1779), மாரிமுத்தாப்பிள்ளை (1712-1787) என்பவர். இவர்கள் கீர்த்தனங்களும் பதங்களும் அக்காலத்தில் மிகவும் பிரபலமானவை. தற்போதைய மும்மூர்த்திகளுக்கு முன்னோடிகளாவார்.

இன்றைய கருநாடக இசையில் கையாளப்பட்டுவரும் பல்லவி, அநுபல்லவி, சரணம் என்னும் அமைப்புடைய கீர்த்தனை வடிவத்தை முதன் முதலில் ஏற்படுத்தியவர் முத்துத்தாண்டவரே.

திருவையாற்றில் தியாகய்யருக்கு ஆண்டுதோறும் விழா!
புரியாத கர்நாடக இசைக்கு எப்படி வந்தது இந்த மவுசு?
புரியாத சமஸ்கிருதத்தில் தெலுங்கில் பாடப்படும்
பாடல்களுக்கு ஏன் இந்த விளம்பரம்? கேள்விகள்
ஆயிரம் எழலாம்; பதிலென்னவோ ஒன்றுதான் - இது
அவாள் விவகாரம்!

தியாகய்யர் உற்சவம் அவாளின்
தனிப்பட்ட விவகாரம்அல்ல. பகிரங்கமான
அதிகார முறைகேடு; பச்சையான தமிழின
ஒடுக்குமுறை; நம்முடைய உரிமைகள்
மீதான தாக்குதல்.

இந்தப் பார்ப்பனப் புரட்டை அம்பலப்படுத்தி,
தமிழ் மக்களின் இசைமரபை எடுத்துக்காட்டும்
''தமிழ்மக்கள் இசை விழா''வை ''தியாகய்யர் ஆராதனை''
நடக்கும் அதே ஜனவரி 31 - அன்று திருவையாற்றில்
மக்கள் கலை இலக்கியக் கழகம் நடத்துகிறது.



## தமிழ் மக்கள் இசை விழா

ஜனவரி 31, 1994, திருவையாறு

தமிழறிஞர்களின் ஆய்வுரைகள்

கலை, இசை நிகழ்ச்சிகள்

*தமிழ்மக்கள் அனைவரும் வருக!*
*தமிழ்மக்கள் இசைக்குப் படை சேருங்கள்!*
*பார்ப்பனிய எதிர்ப்புக்குப் படை சேருங்கள்!*

மக்கள் கலை இலக்கியக் கழகம்,
தமிழ்நாடு.

படிப்பகம்

www.padippakam.com

# மாவோ நூற்றாண்டு விழா

மா மேதை மா சே துங் கிழக்கில் உதித்த இன்னொரு செங்கதிர். கீழைக்காற்று மேலைக்காற்றை வெல்ல முடியும் என்று நிரூபித்தவர். இவ்வாண்டில் சர்வ தேச பாட்டாளி வர்க்கம் அவரது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறது.

எளிய சீன விவசாயக் குடும்பத்தில் பிறந்த மாவோ பத்திரிக்கையாளனாய், கவிஞனாய், பொதுவுடைமை ஊழியனாய், இராணுவ வீரனாய் - தளபதியாய், அரசுத் தலைவனாய், தத்துவ ஆசிரியனாய், தேசிய - சர்வதேசிய தலைவனாய் உயர்ந்தவர். தத்துவம், அரசியல், பொருளாதாரம், பண்பாடு ஆகிய அனைத்திலும் ஆழமான தடயங்களைப் பதித்த அவரது அசலான படைப்புகள் எதிரிகளாலும் போற்றப்படுபவை.

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகிய உலகப் பொதுவுடைமைப் பேராசான்களின் வரிசையில் சிறப்பான இடத்தைப் பெற்றவர், மாவோ. அவர் வழங்கிய மாவோ சிந்தனை காலத்தால் அழியாத சித்தாந்தமாக வைத்துப் போற்றப்படும். அதன் ஒளியில் பொதுவுடைமை லட்சியத்தை நோக்கி உறுதியோடு பயணத்தைத் தொடருவோமென இந் நூற்றாண்டு விழாப்பொழுதில் சபதமேற்போம்.

## மாவோ யேனான் உரை
## படைப்புக் கலை: சில பிரச்சனைகள்

புரட்சிகர இலக்கியமும் கலையும் உண்மை வாழ்வினின்றும் வகை வகையான பாத்திரங்களைப் படைக்கின்றன; வரலாற்றை முன்னோக்கி உந்தித்தள்ள மக்களுக்கு உதவுகின்றன. கார்க்கியின் 'தாய்' நாவலின் பாவெல், அவனது தாய் ஆகிய இரு பாத்திரங்கள், லூசுன்னின் ஆ கியூ நாவலில் வரும் ஆ கியூ என்ற பாத்திரம் ஆகியவை இத்தகைய பாத்திரப் படைப்புகள்.

பசி, குளிர், பட்டினி, வறட்சி, சுரண்டல், அடக்குமுறைக் கொடுமை, தீண்டாமை, சாதிக் கொடுமை, மதவெறி - இந்த வடிவங்கள் இந்தியாவெங்கும் இருக்கிறன; மக்கள் இதற்குள்ளேயே சிக்கி, போராடி, அன்றாட விஷயங்களாக அவற்றைப் பார்க்கிறார்கள்; ஆனால் எழுத்தாளர்களோ, கலைஞர்களோ அவ்வாறு மட்டும் பார்ப்பதில்லை; அவற்றைச் செறிவாக்கி, அவற்றுக்குள்ளே முரண்பாடுகளை, போராட்டங்களை எடுத்துக்காட்டி பொது மக்களை விழிப்புறச் செய்கிறார்கள்; சூழலை மாற்றியமைக்க ஒன்றுபட்டுப் போராடத் தூண்டும் படைப்புகளைச் செய்கிறார்கள்; இத்தகைய கலை இலக்கியப் பணி இல்லாவிடில் சமூகத்தை மாற்றும் பணி முழுமை அடையாது; குறைந்தபட்சம், அது விரைவாக, முழுமையாகச் செயல்பட முடியாது.

சீன நிலைமைகளில் இதுபற்றிச் சிந்தித்த மாவோ கலாச்சாரப்படையின் அவசியத்தை வலியுறுத்தினார். யேனானின் செந்தளம் அமைந்ததும் இப்பிரச்சனைகளை விவாதிப்பதற்காக கலாச்சார முன்னணியாளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் கூட்டப்பட்டார்கள்.

ஒருபுறம் ஜப்பானிய, ஏகாதிபத்தியம் சரமாரியாகக் குண்டுகளால் தாக்கி யேனானை அழித்துக் கொண்டிருந்தது; இன்னொருபுறம், சீன விடுதலைக்கான செந்தளமான யேனானில் கம்யூனிசப் போராளிகள் தங்கள் திட்டங்களைச் செயல்படுத்தினார்கள்; அந்த சூட்டுக்கிடையே தான் கலைஞர்கள் மத்தியில் தனது கருத்துக்களை மாவோ வைத்தார்; விவாதிக்கச் சொன்னார்.

புரட்சி, கலை இரண்டுக்கும் உள்ள உறவுகள் பற்றி பல பிரச்சினைகளை அவர் முன்வைத்தார். வர்க்க நிலைப்பாடு; குறிப்பான நிலைப்பாட்டிலிருந்து, குறிப்பான விஷயங்கள் பற்றி குறிப்பான கண்ணோட்டம்; யாருக்காக, எப்படிப் படைப்பது?; மார்க்சிய - லெனினிய சித்தாந்தக் கல்வி; சமுதயாக்கல்வி; சித்தாந்தப் போர் ஆயுதமாக விமர்சனத்துறை - என்று பல பகுதிகளாக ஆய்ந்து தன் விவாத உரையை நிகழ்த்தினார் மாவோ.

இருபத்திரண்டு நாட்களுக்கு விவாதம் நடந்தது; புரட்சிக் கலைஞர்கள், கோமிந்தாங் ஆட்சிமீது நம்பிக்கை இழந்து யேனானை நம்பிக்கை நட்சத்திரமாகக் கருதி அங்குவந்த கலைஞர்கள் ஆகியோர் தத்தம் கருத்துக்களை முன் வைத்து விவாதித்தார்கள். அதில் ஒருவர் வெல்ஸின் உலக அகராதியிலிருந்து கூட கலை இலக்கியம் என்பதற்குச் சொற்பொருள் கூறி விவாதித்தார். விவாதங்களில் உடன் இருந்து குறிப்பெடுத்த மாவோ அவர்களிடம் புன்சிரிப்போடு சொன்னாராம்: ''கீழே இறங்கிப் போய் மக்களிடம் கேளுங்கள்; அவர்கள் கலை இலக்கியம் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று பாருங்கள்!''

இந்த விவாதத்தில் குறிப்பான ஒரு விஷயத்தை மட்டும் நாம் எடுத்துக்கொண்டு தமிழ்ச் சூழலுக்குப் பொருத்திப் பார்க்கலாம். கலைஞன் படைக்கிறான்; அவ்வாறு படைக்கும்போது தன் விருப்பத்துக்கு ஏற்ப உயர்ந்த வடிவத்தில் படைப்பதா? அல்லது அதிகமாக மக்களிடம் போய்ச் சேர வேண்டும் என்ற நோக்கத்தோடு ஜனரஞ்சகமாகப் படைத்துப் பரவலாக்குவதா?

தமிழகத்தில் இந்தக் கேள்விகளை அடித்துப் புரட்டிப்போட்டு பிழிந்தெடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்ள். புரட்சிக் கலைஞர்களைத் தவிர மற்ற பலர் மிக விரிவான விவாதங்களை (ஒரு முடிவுக்கு வரக்கூடாதென்பதற்காகவே) நடத்தி வருகிறார்கள். சுருக்கமாக, அவர்களின் கருத்து: ''கலை மிக உயர்ந்த வடிவத்தைப் பெறும் போதுதான் காலத்தால் அழியாத நிரந்தரத்துவத்தைப் பெறும்; மக்களுக்காக என்று சொல்லிப் பரவலாக்கினால், ஜனரஞ்சகப் படுத்தினால் படைப்பு கொச்சையாகிவிடும்; நீர்த்துப்போய்விடும்''. இது சரியா? சரியல்ல, தவறு. மாவோவின் குறிப்புக்களின் ஒளியில் நமது தரப்பு வாதங்களை இனி பார்ப்போம்.

● ● ●

மாவோ சொல்கிறார்: ''எம்முடைய இலக்கியமும் கலையும் அடிப்படையாகத் தொழிலாளர்கள், விவசாயிகள், படைவீரர்களுக்கானவை. பரவலாக்குதல் என்பதன் பொருள் அவர்களிடம் பரவலாக்குதல்; தராதரங்களை உயர்த்துதல் என்பதன் பொருள் அவர்களுடைய தற்போதைய நிலையிலிருந்து, அந்த மட்டத்திலிருந்து முன்னேற்றுவது என்பதாகும். அவர்களுக்குச் சாதகமானதும், அவர்களால் உடனே ஏற்றுக் கொள்ளக்கூடியதும் எதுவோ அதையே நாம் பரவலாக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

எனவே, அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்குமுன், அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளும் பணி இருக்கிறது. தராதரங்களை உயர்த்துவதற்கு இது இன்னும் அதிகமாகப் பொருந்தும்.

உயர்த்தத் தொடங்குவதற்கே அடித்தளம் தேவை. ஒருவாளித் தண்ணீரை எடுத்துக் கொள்வோம். அதைத் தரையிலிருந்து தானே மேலே இழுக்கிறோம்? அந்தரத்திலிருந்தா இழுக்கிறோம்? அப்படியானால், இலக்கியமும் கலையும் எந்த அடித்தளத்திலிருந்து உயர்த்தப்படுவது? நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் அடித்தளத்திலிருந்தா? முதலாளி வர்க்கங்களின் அடித்தளத்திலிருந்தா? சிறுமுதலாளி வர்க்க அறிவுஜீவிகளின் அடித்தளத்திலிருந்தா? இல்லை, இவை எதிலிருந்தும் அல்ல, பரந்துபட்ட தொழிலாளர், விவசாயிகள், படைவீரர்களின் அடித்தளத்திலிருந்தே... ...''

அப்படியானால், தராதரம் - பரவலாக்குதல் இரண்டுக்கும் என்ன உறவு? பிரச்சனையை மக்களின் தேவையிலிருந்து பார்க்கலாம். மக்களுக்கு எளிய, தெளிவான படைப்புக்கள் வேண்டும். எதிரியுடன் கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு, எதிரிகளால் எழுத்தறிவற்ற கல்வியற்ற மூடர்களாக, அடிமைகளாக நசுக்கப்பட்டுக் கிடக்கும் மக்களுக்கு போராட உற்சாகம் வேண்டும்; வெற்றி மீது நம்பிக்கை வளர வேண்டும்; ஒற்றுமை பலப்பட வேண்டும்; எதிரிக்கு எதிராக ஒரே மனத்தோடு, ஒரே சிந்தனையோடு போராடுவதற்காக பரந்த பொது அறிவு அவர்களுக்கு வேண்டும்; பரந்த கலாச்சார அறிவு வேண்டும்; நிறையக் கலை இலக்கியப் படைப்புக்கள் வேண்டும்.

மாவோவின் சொற்களில் அவர்களுக்கு உடனே தேவை 'பட்டாடைகளில் அதிக பூ வேலைப்பாடு' அல்ல; 'குளிர் காய விறகு'. ஆனால் மக்களுக்கு ஒரே தரத்தில் படைப்புக்கள் கொடுப்பது சரியா? சரியல்ல; அவர்கள் அடுத்தடுத்த உயர்ந்த தரங்களைக் கோருகிறார்கள்; அவர்களின் மட்டம் உயர்த்தப்பட வேண்டும். தரம் உயர்த்துவதைத் தீர்மானிப்பது பரவலாக்குதலே; அதேசமயம், பரவலாக்குகின்ற வேலைக்கு தரம் வழிகாட்டுகிறது.

சீனப் புரட்சி அனுபவத்திலிருந்து பார்த்தால், நேரடியாகவும் தரமான படைப்புகள் அளிக்கப்பட்டன; மறைமுகமாகவும் அத்தேவைகள் நிறைவேற்றப்பட்டன. அதாவது, மக்களுக்கு உதவி செய்யும், கற்றுக் கொடுக்கும் முன்னணியாளர்களுக்கு தரமான கலை, இலக்கியம் கொடுக்கப்பட்டது; அவர்கள் தங்களின் ஊக்கமான முன்முயற்சியோடு மக்களுக்கு தரத்தை ஊட்டினார்கள்.

இந்த அனுபவத்திலிருந்து கற்றுக் கொண்டு தமிழக நிலைமைக்கேற்ப இப்பிரச்சனையை நாம் அணுகுகிறோம். இதற்கான பிரச்சாரக் கருவியாக, 'புதிய கலாச்சாரம்' ஏடு வெகுஜனக் கலாச்சார ஏடாக நடத்தப்படுகிறது; இது கலை இலக்கிய பண்டிதர்களுக்காக, கலை இலக்கிய ஆய்வுகள் நடத்தும் பத்திரிகை அல்ல; ஒரு குறுகிய வட்டத்துக்குள் நின்றுவிடும் நோக்கமுடையதும் அல்ல. இதனாலேயே 'புதிய கலாச்சாரம்' ஒரு இலக்கிய ஏடு அல்ல என்று விமர்சிப்பவர்கள் உண்டு; இலக்கிய ஏடு என்றால் ஆழமான விஷயங்களைப் போடவேண்டும் என்கிறார்கள்.

'புதிய கலாச்சாரம்' ஏட்டின் வரம்பை அவ்வாறு குறுக்க முடியாது; ஒரு 'கணையாழி' பத்திரிக்கைபோல குறைந்தபட்ச வாசகர்களுக்காக நடத்த முடியாது; லட்சக்கணக்கான வாசகர்களைச் சென்றடைவது



எப்படி என்றுதான் சிந்திக்க வேண்டுமே தவிர, அவர்களையெல்லாம் தவிர்த்து விட்டு குண்டுசட்டிக்குள் குதிரை ஓட்ட முடியாது; இப்படிப்பட்ட 'இலக்கியத் தவம்' 'இலக்கியச் சேவை' தேவைதானா, அவசியம்தானா என்பதை சமூக அக்கறை கொண்ட கலைஞர்கள் சிந்திக்க வேண்டும்.

''அதிகமான மக்கள் மந்தைகள்; அது மலிவான கலாச்சாரத்தையே விரும்புகிறது; குறைந்த அளவு மக்கள் மட்டுமே புத்திசாலிகள், அவர்கள் மட்டுமே தரத்தை விரும்புகிறார்கள்'' என்ற வாதத்தை அந்தப் புனித, சுத்த இலக்கியவாதிகள் வைக்கிறார்கள்.

மக்கள் மந்தைகள் அல்லர்; முட்டாள்கள் அல்லர்; தரமில்லாத மூடர்கள் அல்லர்; அனைவருக்கும் விளங்கும்படியான எடுத்துக்காட்டாக சந்தைச் சினிமாக்களின் வெற்றி, தோல்வியை அலசிப் பார்க்கலாம்.

மிக மோசமான மசாலா நெடியடிக்கும் சகலகலா வல்லவன், சின்ன தம்பி, சின்ன ஜமீன், அண்ணாமலை போன்ற படங்கள் வெற்றி அடைகின்றன; ஆபாச ஜோக்குகள், ஆபாச காட்சிகள், மசாலாக்கள் இல்லாத ஆனால் இடைத்தரப்படம் Off - beat) என்று சொல்லப்படும் வீடு, நிர்மால்யம், மாபூமி, அங்குர், நிஷாந்த், அர்த் - சத்யா போன்ற படங்களையும் (இதில் எல்லாப் படங்களின் கருத்துக்களோடு நாம் ஒத்துப் போகாவிட்டாலும்) கனமான கருத்து, வடிவச் சிறப்பு, சொல்லப்படும் முறை போன்ற தரத்துக்காக மக்கள் வரவேற்றுப் பார்க்கிறார்கள்.

மசாலாப்படம் வெற்றிகரமாக ஓடும் போதெல்லாம் ''மக்களின் தரம் மோசம், 'இதுகளை' மாற்றவோ, திருத்தவோ முடியாது'' என்று பலர் சொல்கிறார்கள்; அதே மக்கள் வேறு வகைப் படங்களை வெற்றி பெறச் செய்தால் மக்களிடம் நல்ல கலையைப் புரிந்து கொள்ளும் குணம் இருப்பதாக அதே நபர்கள் சொல்கிறார்கள். இப்படி ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிக்குத் தாவுகின்ற இவர்களின் விமர்சனப் பார்வையில்தான் கோளாறு இருக்கிறது.

மோசமான படம் வெற்றி அடையும்போது கீழ்த்தரமான கலை வடிவம், கருத்து இரண்டின் ரசனைக்கும், தீனிபோடுவதை நாம் மறுக்கவில்லை; ஆனால் வேறு வகைப்படங்களை அவர்கள் வெற்றி பெற வைக்கும் அதே மக்களிடம் தரத்துக்கான வாய்ப்புகள் உள்ளன; அவர்கள் தங்கள் தரம் வளர வேண்டும், உயர வேண்டும் என்ற தாகத்தோடு, பசியோடுதான் இருக்கிறார்கள்; லெனின் மொழியில் சொல்வதானால், ''**உண்மையான கலைப்படைப்பு மக்களிடம் உள்ள கலைஞனைத் தட்டி எழுப்புகிறது; அவர்களது உலகக் கண்ணோட்டத்தை மட்டுமல்லாமல், அழகியல் - கலையியல் ரசனைகளையும் அவர்கள் உருவாக்கிக் கொள்ள வழி செய்கிறது**''.

மக்களிடம் ரசனை ஊட்டுவதில், வளர்ப்பதில், கற்றுக் கொடுப்பதில் கலை - இலக்கியத்துக்குப் பங்குண்டு. இந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் தந்தக் கோபுரக் கலைஞர்களே ''மக்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை; மக்களுக்கு ஒரு முகமே கிடையாது; நான் எழுதுவதை எங்கோ ஒரு மூலையில் இருக்கும் ஒற்றை ஆள் என்றோ ஒருநாள் புரிந்து கொண்டால் போதும்'' என்று பிதற்றுகிறார்கள்; இவர்கள் கலை மக்களுக்காக அல்ல, கலை கலைக்காகவே என்ற கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். மனிதன் வீட்டைக் கட்டுகிறான்;

படிப்பகம்

www.padippakam.com

அது வீட்டுக்காகவே, குடியிருப்பதற்காக அல்ல என்று சொல்லி ஒருவர் மனம் போன போக்கில் கட்டினால் எப்படிப் பயனற்றதாகப் போகுமோ அதுபோலவேதான் கலையும். இதே கூட்டத்தைச் சேர்ந்த ஒரு நபர் ''2000 பிரதிகளுக்குமேல் ஒரு பத்திரிக்கை நடத்தப்படுமானால் அது இலக்கியப் பத்திரிகையே அல்ல'' என்று ஒரு வரம்பையே அறிவித்தார். வரம்புதான் போட்டாரே, எதற்காக 2000 என்றுதான் புரியவில்லை!

இந்த தந்தக் கோபுரவாதிகள் எப்போதுமே கீழே இறங்குவதில்லை; அதனாலேயே அவர்களுக்கு மக்களைப்பற்றித் தெரியாது; மக்களின் சமூக, கலாச்சாரப் பிரச்சனைகள் பற்றித் தெரியாது; மக்கள் என்ன தரத்தை விரும்புகிறார்கள் - அதன் பிரச்சனை என்ன என்றும் அவர்களுக்குப் புரியாது. (சரியாகச் சொல்வதானால், ஆபாச - மசாலாப் படங்களை உயர்ந்த தரத்தில் கொண்டு வருவதையே இவர்கள் விரும்புகிறார்கள்; எதிர்பார்க்கிறார்கள்; அதையே கலைப்படம் என்று போற்றவும் செய்கிறார்கள்.) மக்களைப்பற்றி விமர்சிப்பதற்கு இவர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது?.

இதற்கு என்ன காரணம்? இவர்கள் தங்கள் தகுதி, மதிப்பு பற்றி எல்லாக் காலத்துக்கும், கேள்விக்கிடமற்ற, நிலையான உறுதியான இடம் என்று ஒன்றை தாங்களே நினைத்துக் கொள்கிறார்கள்; மக்களின் தரம் சிறுமையுடையது என்ற கண்ணோட்டம் நம் நாட்டைப் பொறுத்த அளவில் மேல்வர்க்க, மேட்டுக்குடி, மேல்சாதிக் கண்ணோட்டமே. மற்ற மக்களைத் தரம் தாழ்ந்தவர்கள் என்று கருதுவதால்தான் அவர்களுக்குக் கலைத் தரம் தேவையில்லை, அவர்கள் வெந்ததைத் தின்று வந்ததை வாழ்ந்தால்போதும் என்று இவர்களே தீர்மானித்துக் கொள்கிறார்கள்.

எனவே, கலைக்கு ஒரு தரம் வேண்டும் என்று மேட்டுக்குடிக் கலைஞர்கள் சொல்வது வேறு; மாவோ சொல்வது வேறு. இரண்டும் எதிர் எதிர்ப் பாதைகள். மக்களின் உணர்வை, ரசனையை உயர்த்த வேண்டும் என்ற அக்கறை சமூக லட்சியம் உள்ளவர்களுக்குத்தான்; இவர்கள் மாவோ சொல்லும் முறையில் சமூகத்தை அறியும் வடிவமாக, யாதர்த்தத்தை அளவிடும் கருவியாகக் கலை இலக்கியத்தைக் கருதுகிறார்கள்; இவர்களுக்குத் திட்டவட்டமான லட்சியம் உண்டு; அதனால், யதார்த்தத்தின் துணுக்குகளை, துகள்களை வைத்திருக்கும் எதிர்மறையான சந்தை இலக்கியத்திலிருந்து ஆய்வு செய்து கற்றுக் கொள்கிறார்கள்; அதேபோல, யதார்த்தத்திலிருந்து முற்றிலும் அறுத்துக் கொள்கிற மேட்டுக்குடிக் காரர்களிடமிருந்து இவர்களும் விலகியே நிற்கிறார்கள். இது நியாயம்தானே?

● ● ●

சந்தைச் சினிமா இயக்குனர் ஒருவரை எடுத்துக் கொள்வோம். அவர் காமிராவில் கண்ணைப் பொருத்தும் போதே அவரெதிரே பணம் போட்டவரின் கடுகடுவென்ற முகம் தெரிகிறது; படம் கிராமம் அல்லது நகரத்தில் உள்ள குறிப்பிட்ட பிரிவினரை எட்ட வேண்டும் என்ற சிந்தனையோடு அவர் இயங்குவதால் எதிரே அவர்கள் முகம் நிழலாகத் தெரிகிறது; இவற்றுக்கு ஏற்பவும், தன் வர்க்க வாழ்க்கையிலிருந்து உருவாக்கிக் கொண்ட கருத்து அல்லது மழுங்கிப்போன முட்டாள்தனம் ஆகியவற்றைக் கலந்தும் அவர் படம் பண்ணுகிறார்; கொஞ்சமாகவோ, கொசுறாகவோ கிராமப்புறத்து அப்பாவிக் கூலியாள், பண்ணையடிமை, ஒடுக்கப்படும் கிராமத்து உழைப்பாளிப் பெண் / குடும்பம், நாட்டுப்புறச் சொலவடைகள், கிராமப்புற விடலைகள், ரவுடிகள், கோமாளிகள், நாடோடிப் பாத்திரங்கள் என்று யதார்த்தத் துணுக்குகள் தலைநீட்டி விடுகின்றன. இது மசாலா சினிமா இயக்குநரின் தொழில்முறை. யாருக்காக என்பதில் அவர்களுக்கு ஒரு கண்ணோட்டம் உள்ளது - இது எதிர்மறை எடுத்துக்காட்டு.

சீனப்புரட்சி எழுத்தாளர் லூசுன் தனது அனுபவமாகச் சொன்னதை உதாரணம் கொடுக்கலாம். கடுமையான அடக்குமுறை நிலவிய காலகட்டத்தில் தன் வீடுதேடி வந்து கதைப் புத்தகம் கேட்டு வாங்கவந்த இளைஞன் தன் இதயத்தின் அருகின் இருந்த உள் பாக்கெட்டில் வியர்வை ஈரத்தில் நனைந்த பணத்தாளை எடுத்துக் கொடுத்ததை நினைவு கூறும் லூசுன், அந்தச் சம்பவத்துக்குப் பிறகு பேனாவைக் கையில் எடுக்கும்போதெல்லாம் அந்த வேலையில்லா இளைஞனின் முகம் நினைவில் வந்து தனக்குச் சமூகப் பொறுப்பை நினைவூட்டியது என்றார் - இது நேர்மறை எடுத்துக்காட்டு.

யதார்த்தத் துணுக்கு சிதறியிருக்கும் சந்தைக் கலையிலிருந்து நாம் கற்றுக் கொள்ள முனையலாம்; யதார்த்தத்தை முழுமையாகக் கொடுக்கும் லூசுன் போன்றவரை முன்னோடிகளாகவே கொள்ளலாம். அவர்களிடம் யாருக்குப் படைக்கிறோம் என்ற கண்ணோட்டம் இருக்கிறது. முதலாமவருக்கு எதிர்மறைத் தேவை; லூசுனுக்கோ நேர்மறைத் தேவை இருந்தது. இவை தேவையாக இராத மேட்டுக்குடிக் கலைஞர்களிடமிருந்து நாம் என்ன கற்றுக் கொள்ள முடியும்?

மேட்டுக்குடிக் கலைஞர்கள், பல சமூக இயக்கங்களின் கலை, கலாச்சாரப் பங்களிப்பைக்கூட தரம் தாழ்ந்ததென்றே எள்ளி நகையாடுகிறார்கள். அண்மையில் சாகித்திய அகாடமியினர் ''அண்ணா எழுதியது இலக்கியமே அல்ல'' என்று முடிவு எடுத்திருக்கிறார்கள்.

தி.மு.க. கலைஞர்கள் மத்தியில் வர்க்க உள்ளடக்கம் காரணமாக, நிலப்பிரபுத்துவ, குட்டி முதலாளித்துவ பிழைப்புவாதக் கண்ணோட்டம் காரணமாக வக்கிர மனோபாவம் இருந்தது. இது மறுக்க முடியாத விஷயம். ஆனால் அன்று அவர்கள் பெருவாரியான மக்களைச் சென்றடையும் இலக்கியத்தைப் பற்றிச் சிந்திக்காமல் உயர்ந்ததரம் பற்றி மட்டுமே சிந்தித்திருந்தால் பெரும் மக்கள் இயக்கமாக உருவெடுத்திருக்க முடியாது.

அவர்களின் சீர்திருத்த இயக்கத்தின் பலனை அனுபவித்து கல்வி, அறிவு, கலை நுணுக்கம் பெற்றவர்கள் இன்று பார்ப்பனர்களின் கண்ணோட்டத்துக்குத் தாவிவிட்டார்கள். அவ்வாறு 'தரமில்லாத' அந்த இயக்கம் நடந்திராவிடில் இவர்கள் இன்னும் ஆடு மாடு மேய்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்!

எனவே, தொகுப்பாக, மக்களைச் சென்றடையும் எந்த ஒரு சரியான கலை இலக்கியமும் தரம் பற்றிய பிரச்சனையில் மாவோ சொல்வதுபோல இயங்கியல் கண்ணோட்டத்தையே வைக்க முடியும். மக்களின் தேவையை ஒட்டியே தரம் வளர்க்கப்பட வேண்டும். ''புரட்சிகரமான உள்ளடக்கம், சாத்தியமான அதி உயர்ந்த அளவு நிறைவடைந்த கலையியல் வடிவம் - இரண்டினது ஒற்றுமையை நாம் கோருகின்றோம்'' என்றார், மாவோ தனது உரையில்.

● ● ●

யாருக்காக, எப்படி எழுத வேண்டும் என்ற நிலைப்பாடு - கண்ணோட்டம் ஆகிய தெளிவுகள் மக்கள் கலைஞனுக்கு அவசியம் தேவை. அதைப்பற்றி அக்கறை கொள்வதற்கே மார்க்சிய - லெனினியக் கல்வியும், சமுதாயக் கல்வியும் தேவை. இந்த அறிவுத்தேட்டம் இருந்தால்தான் கடந்துபோன காலத்திலிருந்து எவற்றைக் கற்பது, எப்படிக் கற்பது என்ற தெளிவு கிடைக்கும்; அதேபோல நிகழ்கால கலாச்சாரப் பிரச்சனைகள் மீது சரியான விமர்சனமும் தெளிவாக வைக்க முடியும்.

மேலே பார்த்த விவாதம் சுட்டிக்காட்டும் இன்னொரு சுவாரசியமான விஷயம் சந்தை இலக்கியம், கலை கலைக்காக எனும் உயர்குடி இலக்கியம் இரண்டும் ஆளும் வர்க்க கலையின் இருதோற்றங்களே; இரண்டு முகங்களே. 99 சதம் மக்களை சந்தை இலக்கியம் என்ற கொக்கியைப் போட்டு இழுத்து மாட்டிவிட்டு, 1 சதம் மக்களுக்கு மட்டும் போலித்தனமான கலைரசனை வித்தை காட்டுகிறார்கள். இந்த சகாப்தத்தின் முத்திரைச் சொல்: ''சந்தையே கடவுள்!'' இந்தக் கடவுளுக்கே 100 சதம் மக்களும் அடிமை என்று சந்தை விளம்பரம் கதறுகிறது.

இந்த சந்தைக் கலாச்சாரத்திலிருந்து உடனே மக்களைக் காப்பாற்றியாக வேண்டும். அருபமான, காலங்கடந்த, 'காலத்தால் வெல்ல முடியாத', அழிவற்ற, நிரந்தரமான அரசியல் மதிப்பீடுகளை வைத்து அவற்றை நாம் முறியடிக்க முடியுமா? முடியாது. அதை வீழ்த்தாமல் நல்ல புதிய அழகியல் ரசனையை உருவாக்கி வளர்ப்பது சாத்தியமில்லை; அதை வீழ்த்தவில்லை எனில், கலைக்கே வழியில்லை; கலை அழிந்து போகும். கலை இருந்தால்தானே தரத்தைப் பற்றியும், தரத்தை உயர்த்துவதைப்பற்றியும் பேச முடியும். புரட்சிக் கலாச்சார இயக்கம் அதற்கு என்ன வேலைகள் செய்ய வேண்டும்?

இந்திய, தமிழ்ச் சூழலில் இன்று மேல்வர்க்க, மேல்சாதி மனோபாவமே சந்தைக் கலாச்சாரத்தின் உள்ளடக்கமாக இருக்கிறது. இந்த மனோபாவத்தை வெட்டி வீழ்த்த என்ன வேலைகள் செய்ய வேண்டும்?

● இராசவேல்

படிப்பகம்

www.padippakam.com

## மார்க்சீயத்துக்கும் பார்ப்பனீயத்துக்கும் பாலம்:

# கோமலிசம்!

‘‘முற்போக்கு முகமூடியணிந்த பார்ப்பனீயம்’’ என்று ‘சுபமங்களா’ இதழைப் பற்றி நாம் விமரிசித்தபோது, ‘‘நரவேட்டையாடுகிறார்கள்’’ என்றும் இந்த ‘‘நரகல்களுக்கெல்லாம் நான் பதில் சொல்ல வேண்டிய தில்லை’’ என்றும் எரிந்து விழுந்தார் அவ்விதழின் ஆசிரியர் கோமல் சாமிநாதன். இது பழைய கதை; புதுக்கதைக்கு வருவோம்.

ஆர்.எஸ்.எஸ். இந்து முன்னணிக் கும்பலின் பத்திரிகையான விஜயபாரதம் ‘‘சமூகநீதி சிறப்பிதழ்’’ ஒன்றை வெளியிட்டுள்ளது. அவ்விதழில் ‘‘சமூகநீதி’’ பற்றிக் கருத்து கேட்க அவர்கள் தெரிவு செய்துள்ள இடதுசாரி வேறு யாருமல்ல, திருவாளர் கோமல் சாமிநாதன் அவர்கள்தான். விஞ்ஞானம், தத்துவம் - குறிப்பாக மார்க்சீயம் ஆகியவை குறித்த கோமலிசச் சிந்தனை அறிய விரும்புவோர் தவறாமல் அப்பேட்டியை முழுமையாகப் படிக்கவும். அதிலிருந்து பொறுக்கியெடுத்த சில முத்துக்கள்:

*சமூக நீதி என்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*
*நான் மண்டல் கமிஷனை ஆதரிக்கிறேன். அதற்குக் கால வரையறை வேண்டும் என்பதைக் கூட என்னால் ஒத்துக்க முடியல்ல. ஏன்னா, காலம் காலமாக கலாசார ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் ‘ஜீன்’களில் கூட அது கலந்திருக்கிறது.*

சமூக நீதி என்றாலே ‘மண்டல்’ தான் என்று கோமல் முடிவு செய்துவிட்டார் போலும்! தொலையட்டும். அது என்ன ஜீன் தியரி? அடிமைப்படுத்தப்பட்டவர்களின் ஜீன்களில் (உயிரணுக்களில்) கூட முட்டாள்தனமும், திறமையின்மையும் இருக்கிறது என்று மிகுந்த அனுதாபத்துடன் சொல்கிறார் கோமல். ஒரு வேளை மண்டலை ஆதரிக்கும் வேகத்தில் உணர்ச்சி வசப்பட்டு ஏதோ சொல்லிவிட்டார் போலும் என்று நினைத்தால், வேறு ஒரு இடத்தில் கம்யூனிசம் பற்றிய கேள்விக்கு பதிலளிக்கும் போது ‘திறமைக்குக் காரணம் ஜீன்கள்’ என்று கூறித் தன் கொள்கையை தெளிவுபடுத்திவிட்டார்.

சிந்தனையையும், ஆற்றலையும் தீர்மானிக்கும் பிரதான காரணி வாழ்நிலைதான் என்பது மார்க்சியம். இல்லை, பிறப்புதான் (அதாவது ஜீன்கள்தான்) என்பது பார்ப்பனியம் அல்லது நாஜிசம். ‘அறிவியல் ரீதி யா’க’ சுஜாதா எழுதுவதைத்தான் சமூகவியல் ரீதியாக கோமல் விளக்குகிறார்.

*கால தேச வர்த்தமானத்திற்கு தக்கவாறு சமூகநீதி மாறுபடுமா?*
*மாறுபடாது. ஆயிரம் காலம் வரலாம். ஆயிரம் மனித சட்டங்கள் வரலாம். ஆனால் சமூக நீதி மாறாது. எந்தத் தத்துவம் ஏராளமான மக்களைச் சென்றடைகிறதோ, அதுதான்’ சமூக நீதி என காந்தி சொல்கிறார்.*

மனித சட்டங்களால் மாற்றவியலாத சமூகநீதி எது? கீதையில் சொல்லியிருக்கும் சமூகநீதியா? காலத்திற்கேற்ப சமூகநீதி மாறும் என்றுதானே வரலாறு கூறும் உண்மை. பெரும்பான்மை மக்களைச் சென்றடையும் தத்துவமே சரியான சமூகநீதியைப் படைக்கும் என்றால் பாசிசத்தையும், இந்துத்துவத்தையும் கூட ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான்.

*பொருள் முதல் வாதம், அபேத வாதம் கடந்து இன்று விஞ்ஞானமானது வேவ் தியரி (அலை அல்லது பிரக்ஞை) ரீதியான மாறுபாட்டிற்கு சென்றுள்ளதே. அந்த விஞ்ஞான மாற்றத்தை மார்க்சியம் ஏற்றுக் கொள்ள வேண்டாமா?*
*விஞ்ஞானத்திற்கும் மார்க்சியத்திற்கும் சம்பந்தமில்லை. விஞ்ஞானம் இன்று கூறுவதை நாளை மறுக்கும். ஆனால், மார்க்சீயமும், காந்தியமும் தத்துவங்கள். இந்தத் தத்துவங்கள் எந்த அளவு விஞ்ஞான ரகசியத்தை, கண்டுபிடிப்பை சமூகத்திற்கு பயன்படுத்தலாம் என்றுதான் கணக்கிட வேண்டும்.*

‘‘விஞ்ஞானத்திற்கும் மார்க்சியத்திற்கும் சம்பந்தமில்லை!’’ கம்பீரமான இந்தப் பிரகடனமாவது கோமல் அவர்களது மார்க்சிய அறிவின் ஆழத்தை மற்ற அறிவு ஜீவிகளுக்குப் புரியவைத்தால் சரி. ‘‘விஞ்ஞானம் வளர்ந்ததால்தான் மார்க்சியம் தோற்றுப் போனது’’ என்று பொள்ளாச்சி மகாலிங்கம் சுபமங்களாவுக்கு பேட்டி கொடுத்தபோது கோமல் அவரிடம் கை குலுக்கியிருக்கக் கூடும். நமக்குத்தான் அதைப் பார்க்கக் கொடுத்துவைக்கவில்லை.

*காந்தியம் பெரிதா, மார்க்சியம் பெரிதா என்றில்லாமல் எந்த ஒரு தத்துவமும், சரியான முறையில் சரியான ஆட்களால் எடுத்தாளப்படும்போது, சரியான சமூகத்தை படைக்கும் என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?*
*நிச்சயமாக, எந்த ஒரு தத்துவமும், சரியான முறையில், சரியான வழியில் எடுத்துச் செல்லப்படும்போது வெற்றி பெறுவது நிச்சயம். அப்படியில்லை எனில் அது தத்துவம் இல்லையே. ஆனால் தத்துவங்களிடையே முரண்பாடு அல்லது சர்ச்சை இருந்து கொண்டேதான் இருக்கும்.*

‘‘எல்லா நதிகளும் கடலுக்கு - எல்லா மதங்களும் இறைவனுக்கு ’’ என்பதுபோல எல்லா தத்துவமும் விடுதலைக்கு என்கிறார் கோமல். ஒவ்வொரு தத்துவமும் தனக்குரிய வர்க்கத்துக்குதான் வெற்றியைத் தரும் என்பதுதானே அரிச்சுவடி! அதனால் தானே மார்க்சியம் மட்டுமே தொழிலாளி வர்க்கத்தின் தத்துவமானது.

தத்துவம் எதுவானாலும் சரியான முறையில் அதை அமல்படுத்த வேண்டும் என்கிறார் கோமல். அயோத்தியிலும், பம்பாயிலும் இந்துத்துவத்தை சரியான முறையில்தானே பாரதிய ஜனதா அமல்படுத்தியது! ஒரு வேளை தீவிரம் போதாதோ?

*வெளிநாட்டு டி.வி. ஸ்தாபனங்களை பாரதத்தில் அனுமதிப்பதின் மூலம், நமது பாரம்பரிய கலாசாரம் அழிக்கப்படுமே. இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?*
*நாம் நமது பாரம்பரியக் கலாசாரத்தை நம் குழந்தைகளுக்கு கல்வி மூலம் ஊட்டியாக வேண்டும். இல்லையேல் கலாசார சீரழிவு நடப்பதைத் தடுக்க முடியாது.*



கோமல்

*ராமன் - சம்பூகன், நந்தன் - தில்லை அந்தணன், துரோணன் - ஏகலைவன்... இதில் எது நமது பாரம்பரியம்? கேள்வி கேட்பதும் நம்மவாள்; பதில் சொல்வதும் நம்மவாள்; அப்புறம் மத்தவாளைப் பத்தி என்ன கவலை?*

*‘விஜயபாரதம்’ வாசகர்களுக்குத் தங்களின் செய்தி என்ன?*
*நாட்டில் நடக்கும் இனப்படுகொலைகள், ஜாதியப் படுகொலைகள், மதப்படுகொலைகள் தடுத்து நிறுத்தப்பட்டு மத நல்லிணக்கம் ஏற்பட்டு அமைதி நிலவ வேண்டும்.*

நாணயமான எவரும் ‘இனிமேல் விஜய பாரதம்’ படிக்காதே’ என்றுதான் அதன் ஏமாளி வாசகர்களுக்கு செய்தி சொல்லியிருக்க முடியும். ஆனால் இந்துமதவெறி என்றுகூடக் குறிப்பிட்டுச் சொல்லாமல் பொதுவான ஜீவகாருண்ய செய்தியை அருளுகிறார் கோமல்.

● ● ●

ஒரு இடதுசாரியை வலதுசாரி பேட்டி கண்டால் பதில்களில் அனல் பறக்க வேண்டும். ஆனால் ‘வெதுவெதுப்பான நேர்காணல்’ என்று குறிபிட்டுள்ளது விஜயபாரதம்.

அது உண்மைதான். பேட்டியில் கோமல் உதிர்த்துள்ள முத்துகளையெல்லாம் கோர்த்தால் கிடைப்பது மணமாலை; ஆர்.எஸ்.எஸ்.க்கும் மார்க்சிஸ்ட் கட்சிக்கும் இடையிலான சித்தாந்தத் திருமணத்தின் மணமாலை. முத்துக்களை எந்த நூலில் கோர்ப்பது என்கிறீர்களா? பூணூலில்தான்.

— க.மு.

படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்கா : சொர்க்கத்தில் மரணபயம்!



"மக்களால், மக்களுக்காக நடத்தப்படும் மக்களுடைய அரசாங்கம்!" - அமெரிக்க ஜனநாயகத்தின் தந்தை அபிரகாம் லிங்கனின் புகழ் பெற்ற பிரகடனம் இது.

"தன்னுடைய குடிமக்களைப் பாதுகாப்பதுதான் எந்த ஒரு அரசாங்கத்திற்கும் தலையாய கடமை; ஆனால் அமெரிக்க மக்கள் இன்று பாதுகாப்பாக இல்லை" - இது அமெரிக்க அதிபர் கிளிண்டனின் சமீபத்திய வெள்ளைமாளிகை உரை.

ரசியா நொறுங்கிவிட்டது; ஈராக்கை தரைமட்டமாக்கியாகிவிட்டது; கியூபாவும் லிபியாவும் போதுமான அளவு மிரட்டி வைக்கப்பட்டுள்ளன. அமெரிக்க அதிபராகவும், உலக போலீஸ்காரனாகவும் ஒரே நேரத்தில் பதவியேற்ற கிளிண்டன், எந்த நாட்டில் வசிக்கும் அமெரிக்கர்களின் உயிரைப் பாதுகாக்க முடியவில்லை என்று தவிக்கிறார்?

எல்லோரும் பணிந்து விட்டார்கள்; ஒரே ஒரு நாடு மட்டும் பணிய மறுக்கிறது. மெக்சிகோவுக்கு வடக்கே, கனடாவிற்குத் தெற்கே உள்ள அந்த நாட்டின் பெயர் - அமெரிக்கா. ஊர் உலகத்துக்கெல்லாம் கொள்ளிவைத்த அயோக்கியனின் உச்சந்தலையே இப்போது பற்றி எரிகிறது.

வன்முறை, வன்முறை, வன்முறை! நகரங்கள், சிறுநகரங்கள், உணவு விடுதிகள், நூலகங்கள், மருத்துவமனைகள், சாலைகள் எல்லாமே 'கலவரப் பகுதி'களாகிவிட்டன. "உயிரைப்பாதுகாத்துக் கொள்ள, மக்கள் தங்கள் வீடுகளையே சிறைக் கோட்டங்களாக மாற்றிக் கொள்கிறார்கள்" என்று அலறுகிறது அமெரிக்காவின் டைம் பத்திரிகை.

● கலிஃபோர்னியா மாநிலத்திலுள்ள ஒரு மருத்துவமனை. மாலை 6 மணியளவில் பரபரப்பான நேரத்தில் மருத்துவமனை ஒலிபெருக்கிகள் "அபாயம் அபாயம்" என்று அலறுகின்றன. யுத்தகாலத்தில் சங்கொலி கேட்டு பதுங்கு குழியில் மறைவதைப்போல மக்கள் சிதறி ஓடி ஒளிகின்றனர்.

குழந்தைகள் வார்டில் நுழைந்த ஒரு இளம் பெண் நிதானமாகத் தன் கைத்துப்பாக்கியை எடுத்து அங்கிருந்த நர்சை சரமாரியாகச் சுடத்தொடங்குகிறாள். காயத்து

டன் நர்ஸ் தப்பி ஓடத்தொடங்கியவுட
வெறியுடன் அவளைத் தொடர்ந்து விரட்
விரட்டி சுடுகிறாள். பார்வையாளர்க
அதிர்ச்சியில் உறைந்து நிற்கிறார்கள்.

"என் வாழ்க்கையை கெடுத்தாய்; எ
கணவனையும் குழந்தைகளையும் திருடி
கொண்டாய். ஒழிந்து போ" என்று சொ
லிக் கொண்டே அந்த நர்ஸின் வாய்க்கு
துப்பாக்கியை நுழைத்து சுடப் போகும்
மருத்துவமனைப் பணியாளர்கள் அ
ளைத் தடுத்துப் பிடித்து போலீசில் ஒ
டைக்கின்றனர்.

இது விவாகரத்து பிரச்சினையி
பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணின் பழிவா
கும் நடவடிக்கை. "நம் ஊரில் அரிவா
அமெரிக்காவில் துப்பாக்கி" - இதிலென்
பெரிய அதிசயம் என்று நீங்கள் அலட்சி
மாக நினைப்பதாயிருந்தால் மேலே படி
கள்.

● ஜெனிஃபர் ரீ என்ற பெண் தன்
டைய இரண்டு தங்கைகளையும் ஒரே நே
தில் சுட்டுக் கொல்கிறாள். காரணம்? தெரி
வில்லை. ஜெனிபர் ரீயின் வயது - 15.

தன் நண்பர்களுடன் விளையா
கொண்டிருக்குபோது திடீரென்று நெற்
பொட்டில் சுட்டுக்கொண்டு சாகிறான்
லோஸ். காரணம் நண்பர்களின் கே
அவன் வயது 16.

● கன்சாஸ் நகரில் ஒரு திரையரங்
படம் ஓடிக் கொண்டிருக்கிறது. திடீ
காட்சிக்கு சம்பந்தமில்லாமல் சட சட வெ
துப்பாக்கி வெடிக்கும் சத்தம். அம்மாவு
சினிமாவுக்கு வந்திருந்த 15 வயது சிறுவ
தாயின் தலையில் 4 குண்டுகளை பாய்
விட்டு நிதானமாக அரங்கைவிட்டு வெ
யேறிக் கொண்டிருந்தான்.

தன் தாயும் தந்தையும் விவாகர
செய்து கொள்ளவிருந்தது மகனுக்குப் பி
கவில்லை என்பதே காரணம்.

● விஸ்கான்ஸின் நகர உணவு வி
யொன்றில் சாப்பிட்டுக் கொண்டி
டெரஸ் என்ற 25 வயது இளைஞன் '
லோரும் வெளியேறுங்கள்' என்று கத்
படியே தன் துப்பாக்கியை உயர்த்துகிற
சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் அல
டித்துக் கொண்டு வெளியேறும்போ
அவர்களை நோக்கி கண்மண் தெரியா
சுடுகிறான். இரண்டு முதியவர்கள்
கேயே செத்து விழுகின்றனர். உட
தானும் தலையில் சுட்டுக் கொண்டு மூ
சிதறி அங்கேயே சாகிறான்.

"ஒரு வருடமாகவே மனிதர்க
சுடுவது எனக்கு உற்சாகமளித்து வருகி
இந்த சமூகம் என்னை நசுக்கியது;
இப்போது பதிலடி கொடுக்கிறேன்'
என்று தனது வாக்கு மூலத்தை ஒலிந
வில் பதிந்து சட்டைப்பையில் வைத்
தான் டெரஸ். அவன் ஒரு தனியார் நி
னத்திலிருந்து சமீபத்தில் வெளியேற்ற
டதோ, அல்லது அவனது காதலி அவ
கைவிட்டதோ காரணமாக இருக்க
என்கிறது புலன்விசாரணை
போலீஸ்.



படிப்பகம்

www.padippakam.com

எங்கு திரும்பினாலும் கொலை! கொலைகாரர்கள் யார்?

''சமூகமே அச்சத்தில் உறைந்திருக்கிறது. காரணம் குற்றங்களை எந்த வரையறைக்குள்ளும் அடைக்க முடியவில்லை. கொலைகள் தாறுமாறாக, நினைத்த நேரத்தில், தன்னெழுச்சியாக நடக்கின்றன'' என்கிறார் இவற்றை ஆய்வு செய்த குற்றவியல் நீதித்துறைப் பேராசிரியர் ஜேம்ஸ் மார்குவாட்.

வறுமைதான் காரணம் என்கிறது விபரல் கட்சி; குடும்ப மதிப்பீடுகள் சிதைந்தது தான் காரணம் என்கிறது கன்சர்வேடிவ் கட்சி; துப்பாக்கி விற்பனையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்கிறது ஆளும் ரிபப்ளிகன் கட்சி.

காரணங்களைப் பற்றி கட்சிகளும் பத்திரிகைகளும் ஒருபுறம் விவாதம் நடத்திக் கொண்டிருக்க பள்ளிகள், மருத்துவ மனைகள், நூலகங்கள், கடைகள் - என எல்லா பொது இடங்களும் லட்சக்கணக்கில் செலவு செய்து பாதுகாப்பை பலப்படுத்துகின்றன. ஒரு கொலை விழுந்தால் அதோடு வியாபாரம் படுத்துவிடும் என்பதால் வியாபாரிகள் வாரியிறைக்கின்றனர்.

''நாம் அபாயகரமானதொரு சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்றோம். ஒவ்வொருவரும் தன்னைப் பாதுகாத்துக் கொள்வது தான் ஒரே வழி என்று பெரும்பான்மை அமெரிக்கர்கள் கருதுகின்றனர்'' என்கிறார், கள ஆய்வு நடத்திய சமூக விஞ்ஞான ஆய்வாளர் வில்சன்.

ஒவ்வொரு கொலையின் காரணம், கொலையாளியின் வயது, பால், வாழ்க்கைப் பின்னணி, அவனது ரசனைகள் ஆகிய எல்லா விவரங்களையும் அக்கு வேறு ஆணிவேரக அலசி ஆராய்ந்த கம்யூட்டர் ஆய்வுகளின் முடிவுகள் அமெரிக்காவையே நிலைகுலைய வைத்துள்ளன.

துப்பாக்கித் தோட்டாவுக்கு இரையான சிறுவர்கள் மட்டும் 4200 பேர்; குறைந்தபட்சம் 15% பள்ளி மாணவர்கள் பள்ளிக்கு துப்பாக்கி எடுத்துச் செல்கிறார்கள்; 11 சதவிதம் மாணவர்கள் குண்டடி பட்டவர்கள்; 60 சதவீதம் பேருக்கு என்ன ரகத் துப்பாக்கிகளை எங்கே, எப்படி என்ன விலைக்கு வாங்கலாம் என்று தெரிந்திருக்கிறது. 14 முதல் 17 வயதுக்குட்பட்ட கொலைகாரர்களின் எண்ணிக்கை 124 சதவீதம் அதிகரித்திருக்கிறது.

இத்தனை சிறிய வயதில் ஏன் இந்தக் கொலை வெறி? அவர்கள் யாருக்கெதிராகத் துப்பாக்கி தூக்கியிருக்கிறார்கள்?

''அது சும்மா ஒரு பழிவாங்குவது போல என்று வைத்துக் கொள்ளுங்களேன், துப்பாக்கியை இப்படி அலட்சியமாகப் பிடித்து, அதன் குதிரையை அழுத்தினோனா... டமார்...! அந்தச் சத்தத்தின் பொருள் புரிகிறதா? அதுதான் அதிகாரத்தின் முழக்கம்''

என்று மிகுந்த ரசனையுடன் விவரிக்கிறான் டோக் என்ற 14 வயது பையன்.



**போலீசிடம் சிக்கிய கொலைகாரச் சிறுவன்**

''அதுசரி. அந்தத் தோட்டா யார் மீது பாய்ந்தது?'' பதட்டத்துடன் குறுக்கிடுகிறார் நிருபர்.

''யார் மீதா? எவனாவது வீட்டு வாசலில் நின்று கொண்டிருப்பவன், அல்லது காரில் போய்க் கொண்டிருப்பவன்... இன்னாரென்று இல்லை. சமயத்தில் வானத்தில் கூடச் சுடுவேன். என்னை மயக்குவது அந்த வேட்டுச் சத்தம்தான்.''

காரை ஓட்டியவாறே பேசிக்கொண்டு வரும் டோக், தீடீரென டேப் ரெக்கார்டரைத் தட்டுகிறான். காதைக் கிழிக்கும் சத்தத்தில் ஹை-மெடல் இசையும், ராப் பாடல்களும் ஒலிக்கின்றன.

''இந்தப் பாடல் வரிகளை நீ ரசிக்கிறாயா?'' - தணிவாகக் கேட்கிறார் நிருபர்.

''வரிகளா? அந்த இசை உங்கள் நரம்புகளை முறுக்கேறச் செய்யவில்லை? ஆத்திரம் பொங்கவில்லை?''

''ஒரு முறை கிராமத்துப் பக்கம் காரில் போய்க் கொண்டிருந்தோம். ஒரு சிறிய வீட்டின் காம்பவுண்டுச் சுவரின் மீது அழகான ஒரு நாய். காரை நிறுத்தி ஒரே தோட்டா. துள்ளி சுருண்டு விழுந்தது''.

''இரவில் காரில் போய்க் கொண்டே இருப்போம். அவனவன் வீட்டுக் கதவைச் சாத்திக் கொண்டு நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருப்பான். காரின் வேகத்தைக் குறைத்து, ஹெட்லைட்டை அணைத்து விட்டு... அப்புறமென்ன சரமாரியாகச் சுட வேண்டியதுதான். நடுநிசியில் அவனவன் அலறுவதைக் கேட்க வேண்டுமே...''

''சும்மா முடி வளர்த்துக் கொள்வதிலும் காதில் வளையம் மாட்டிக் கொள்வதிலும் என்ன இருக்கிறது. இந்த வயதில் கையில் துப்பாக்கி இல்லையென்றால் எவனும் மதிக்க மாட்டான்''.

லாஸ் ஏஞ்செல்ஸ் நகர மஃபியா கும்பல் ஒன்றின் வாழ்க்கைச் சரிதமான ''செய் அல்லது செத்துமடி'' என்ற நூல்தான் டோக் மிகவும் விரும்பும் நூல்.

''எங்கள் ஊரின் கறுப்பினச் சேரி மக்களிடம் நான் மன்னிப்பு கேட்க வேண்டும்; அவர்களுடைய பிள்ளைகள் தமக்குள் சுட்டுக்கொண்டு செத்த போதெல்லாம் அதைப் பற்றி நான் கவலைப்படவே இல்லை. இப்போது எங்கள் பிள்ளைகள்!'' - என்ற கண்ணீர் வடிக்கிறாள் ஓமஹா நகரத்தைச் சேர்ந்த போனி எனும் தாய். ரொம்பவும் சாதுவான அவளுடைய 20 வயது மகனின் அறையில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த தானியங்கி துப்பாக்கியைப் பார்த்ததிலிருந்து அவள் நிலை குலைந்துவிட்டாள்.

அந்தச் சிறிய நகரத்தில் துப்பாக்கிச் சண்டை தினசரி நடப்பாகிவிட்டதால் பெற்றோர்களெல்லாம் சங்கம் வைத்து ஒரு அறிவிப்பு வெளியிட்டனர். ''என்ன, ஏது என்று கேட்கமாட்டோம். துப்பாக்கி ஒன்றுக்கு 50 டாலர் தருகிறோம். - ஒப்படையுங்கள்'' என்று அறிவித்தனர்.

அரை மணி நேரத்தில் 588 துப்பாக்கிகள் வந்தன. ஒப்படைத்தவர்களின் வயது 15-க்கும் கீழே. இந்தத் துப்பாக்கிகளைக் கொண்டே ஒரு நினைவுச் சின்னமும் எழுப்பப் போகிறார்களாம். ஆனால் வாங்கிச் சென்ற காசில் புதிதாகத் துப்பாக்கி வாங்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்திரவாதம்?

வெறி, இலக்கில்லாத வன்முறை வெறி; துன்புறுத்தி இன்பம் காணும் வக்கிரம்....



படிப்பகம்

www.padippakam.com



## தாக்குவதற்குக் காத்திருக்கும் கொலைகார இளைஞன்

''நாம் எந்த ஒழுங்குக்கும் கட்டுப் ாத சமூகமாக சீரழிந்துவிட்டோம். இந்த டில் எந்த இடமும் எந்த மனிதனுக்கும் ுகாப்பானதாக இல்லை'' என்கிறார் உளவியல் நிபுணர்.

ஒரு நிமிடத்திற்கு 3 கார்கள் அமெரிக் ில் திருட்டுப் போகின்றன. இவற்றில் க்கு மேல் திருட்டுகள் இல்லை; **'சந் ஷச் சவாரிகள்'**.

ஓடிக் கொண்டிருக்கும் காரின் கண் ுயை எங்கிருந்தோ பறந்த வந்த ஒரு புத்துண்டு நொறுக்குகிறது. 3,4 ஞர்கள் காரின் சொந்தக்காரரை து டிக்கியில் வைத்து பூட்டுகிறார்கள். அந்தக் காரை எடுத்துக் கொண்டு 5,6 நேரம் ''சந்தோஷச் சவாரி'' போகி ர். டிக்கியில் கிடப்பவனை எங்கேயா சாலை ஓரத்தில் நாயைப் போல ு எறிந்துவிட்டு காரை பிரித்து உதி ங்களை அடிமாட்டு விலைக்கு விடுகிறார்கள்; அல்லது காரை எங் பது மோதி நிறுத்திவிட்டுப் போய் ார்கள்.

மெரிக்கச் செழிப்பின் சின்னமாகப் டும் கார் இன்று உருளும் சவப் ாகிவிட்டது; நினைத்த இடத்திற் ம் செல்லும் சுதந்திரத்தை வழங்கிய மரணப் படுகுழியை நோக்கி படுகிறது.

வை திட்டமிட்டு செய்யப்படுப ; 15 நொடிகளில் முடிவு செய்யப் றை வேற்றப்படுகின்றன'' என்கி லீஸ். போலீசாரின் வாகனங்களும் தப்புவதில்லை.

ம், நீதி, தண்டனை - இவற்றை ல்லையென்றாலும் பயப்படக்கூடவா மாட்டார்கள்? இல்லை. இவையெல்லாம் அவர்களைப் பொருத்தவரை அற்பத் தொல்லைகள் - அவ்வளவுதான். தண்டனை வழங்கும் நீதிபதிகளையும் அவர்களது குழந்தைகளையும் காரில் போகும் போது சுடுகிறார்கள். நீதிமன்றங்களுக்குள் துப்பாக்கிச்சூடுகள் அதிகமாகிவிட்டதால் அமெரிக்க நீதிமன்றங்களின் உள்ளே நுழைபவர்கள் எல்லாம் எக்ஸ்-ரே கதிர்களால் சோதனையிடப்படுகிறார்கள். பயம் எனும் பேய் அமெரிக்காவின் சிண்டைப் பிடித்து உலுக்குகிறது.

வீட்டைச் சுற்றி பல ஆயிரம் வாட் ஒளிவிளக்குகள், நிழல் விழுந்தால் அலறும் எச்சரிக்கை மணிகள், வாயிலில் மறைந்திருக்கும் வீடியோ காமெராக்கள், சுற்றுச் சுவரின் மேல் கத்தி வேலிகள். அதில் மின்சாரம் - ஏற்கனவே வைரங்களும் நகைகளும் வைத்திருப்போர் மட்டும் செய்து வந்த இத்தகைய பாதுகாப்புகளை உயர்நடுத்தர வர்க்கத்தினரும் (நம் ஊரில் மாத வருமானம் ரூ.10,000 உள்ளவர்களைப்போல) செய்யத் துவங்கிவிட்டனர். வீட்டை இன்சூர் செய்வதை நிறுத்திவிட்டு அந்தப் பணத்தை இதற்கு - உயிரைப் பாதுகாக்க - செலவு செய்கின்றனர்.

● ● ●

''கதவுகளின் உயரத்தை எவ்வளவு வேண்டுமானாலும் கூட்டலாம்; அவை துப்பாக்கியை தடுக்கக்கூடும்; அச்சத்தைத் தடுக்க இயலுமா?'' என்று கேள்வி எழுப்புகிறார் லாஸ் ஏஞ்சல்ஸ் நகர பெண் கவுன்சிலர் ரீட்டா.

13 வயதுச் சிறுவன் கொலைக் குற்றம் செய்தாலும் - சீர்த்திருத்தப்பள்ளிக்கு அனுப்புவதற்குப் பதில் - அவனை தூக்கில் போடுவதற்கு சட்டத்திருத்தம் கொண்டு வந்திருக்கிறார் கிளிண்டன்.

''அவர்கள் எல்லோரும் கிரிமினல் கும்பல்களாகிவிட்டனர்; ஏற்கனவே ஒவ்வொரு கணமும் மரணத்தை எதிர் நோக்கித் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பிடிபட்டு... விசாரிக்கப்பட்டு... தூக்குமேடைக்கு அனுப்பப்படுவதைப் பற்றியா அவர்கள் கவலைப்படப் போகிறார்கள்?'' என்று சிரிக்கிறார் ஒரு சட்டக்கல்லூரி முதல்வர்.

இருந்தாலும் அமெரிக்கா ஜனநாயக நாடல்லவா? தன்னுடைய இளம் சந்ததிகளுக்கு வாக்குரிமை வழங்குவதற்கு முன்னரே தூக்குரிமையை வழங்கிவிட்டது.

● ● ●

**வெள்ளை மாளிகையே!**

அச்சத்தை ஏற்றுமதி செய்யும் உன் முகம் ஏன் அச்சத்தால் வெளிறுகிறது?

பார்! உன் அஸ்திவாரத்தில் புதைக்கப்பட்ட செவ்விந்தியக் குழந்தைகளின் 'ஆவி' நூற்றாண்டுகள் காத்திருந்து, உன் வாரிசுகளுக்கு உன் கையாலேயே தூக்கு தண்டனை நிறைவேற்றிவைக்கிறது. இது வரலாற்றின் விதி.

எங்களை நோக்கித் திருப்பப்பட்ட ராம்போவின் உணர்ச்சியற்ற துப்பாக்கி இப்போது உன்னை நோக்கியே திரும்புகிறது.

ஈராக்கில் குண்டுவீசச் சென்ற கணவன்மார்களின் பாதுகாப்புக்காக வீட்டுவாயிலில் மஞ்சள் கொடியேற்றினார்கள் உன் சிப்பாய்களின் மனைவிமார்கள்; சிப்பாய்கள் திரும்பிவிட்டார்கள். **ஆனால் எல்லா** வீடுகளிலும் இப்போது மஞ்சள் கொடிகள்.

எலிகளைப் போல எங்களை நசுக்கிக் கொன்றீர்கள். சிறைபட்ட எலிபோல நீங்கள் அலைபாய்கிறீர்கள்.

விண்கோள்களிலிருந்து எங்கள் மீது வீசுகிறீர்கள் பண்பாட்டுக் காளான்களை. அவை உங்கள் பூந்தொட்டிகளில்தான் முதலில் முளைக்கின்றன. எங்களைப் 'பாவி'களாக்கிவிட்டு உங்கள் பிள்ளைகளை மட்டும் 'உண்மையான கிறித்தவனாக' வளர்த்துவிட முடியுமா?

வியத்நாம் காடுகளிலும், சோமாலியாவின் அகதி முகாம்களிலும் 'பயங்கரவாதிகளைத்' தேடிய துப்பாக்கி, உன் மகன் கையில் அமர்ந்து இப்போது உன்னைத் தேடுகிறது.

அச்சத்தில் துடிக்கும் உன் தாய்மார்களுக்காகவும், அறிவிழந்து திரியும் உன் பிள்ளைகளுக்காகவும் நாங்கள் வருந்துகிறோம். எங்கள் அப்பத்தைத் திருடிய சாத்தானே.... நாங்கள் வருந்துகிறோம் - நீ மனம் திரும்பப் போவதில்லையெனினும்.

— சூரியன்

படிப்பகம்

www.padippakam.com

## ''ஃபிலார்மோனிக்கிலிருந்து பண்ணைப்புரம் வரை''-- சென்ற இதழ் கட்டுரைக்கு

# வாசகர் விமர்சனமும் கட்டுரையாளரின் விளக்கமும்

சென்ற இதழில் வெளியான ''ஃபிலார்மோனிக்கிலிருந்து பண்ணைப்புரம் வரை'' என்ற கட்டுரை பெரும்பான்மையான வாசகர்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது. அதே நேரத்தில் இளையராஜாவை விமரிசனமின்றிப் புகழ்ந்து தள்ளியிருப்பதாகவும், கருநாடக இசையையும் தியாகய்யரையும் நியாயமின்றிச் சாடியிருப்பதாகவும் சில வாசகர்கள் கூறியுள்ளனர். அக்கடிதங்கள் அனைத்தையும் முழுமையாக பிரசுரிப்பது கடினம்.

சென்னை வாசகர் திரு. அ.வளவன் விரிவான மறுப்புக் கடிதமொன்றை எழுதியுள்ளார். மற்ற வாசகர்களின் கருத்துக்கள் அனைத்தையும் அவரது கடிதம் உள்ளடக்கியிருப்பதால் அதைச் சுருக்கி வெளியிட்டுள்ளோம். அவர் எழுப்பியுள்ள கேள்விகளில் மையமானவற்றிற்கு மட்டும் விளக்கமளித்துள்ளோம்.

### வாசகர் கடிதம்

... சென்ற இதழில் மருத்துவன் என்பவர் ''பிலார்மோனிக்கிலிருந்து பண்ணைப்புரம் வரை'' என்றும் தலைப்பில் இசைத்துறை சம்பந்தப்பட்ட விமர்சனக் கட்டுரை ஒன்று எழுதியிருந்தார். அதில் இளையராஜாவின் இசையை மையமாக எடுத்துக் கொண்டாலும் பல விஷயங்களை சம்பந்தப்படுத்தி விரிவாக விவாதம் செய்திருந்தார். அவரது கட்டுரை பல தம் பார்ப்பன பத்திரிகையில் வரும் இசை விமர்சனங்களை விடவும் விறுவிறுப்பானதாகவும் உயிருள்ளதாகவம் இருந்தது. ஆனால் பல முக்கிய விஷயங்களில் அவரது விமர்சனக் கருத்துகள் உடன்பாடானதாக இல்லை. ... அவரது கட்டுரையில் முக்கிய இடம் வகித்த மூன்று விஷயங்களை நான் மூன்று உபதலைப்புகளாக எடுத்துக் கொண்டுள்ளேன்.

1. பீத்தோவனையும் தியாகராஜரையும் ஒப்பிட்டது.

... ... ஒரு கலைஞனைப் பொறுத்தமட்டில் நாம் என்ன கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் அவன் தான் வாழ்ந்த காலச் சூழலை எவ்வாறு பிரதிபலிக்கிறான், முற்போக்காகவா, பிற்போக்காகவா என்ற சாரமான விஷயத்தைத் தான். முற்போக்காளன் என்றால் பாதகமான சூழ்நிலையை எதிர்த்தவன் என்று பொருள். இங்கே முற்போக்கு என்தையும் பரிபூர்ணமானதாகப் புரிந்து கொள்ளக் கூடாது. மாறிக் கொண்டே வரும் காலச்சூழலில் ஒரு கலைஞன் முற்போக்கானவனா என்பதைச் சார்பளவில் தான் தீர்மானிக்க வேண்டும். ...

... தியாகராஜரை எப்படி விளக்குகிறார் கட்டுரை ஆசிரியர்? ... இங்கே ஐரோப்பாவைப் போல முடியரசை வீழ்த்தி குடியரசை அமைக்கும் போராட்டமெல்லாம் நடக்கவில்லை. எனவே இங்கே தியாகராஜர், மும்மூர்த்திகள் இசையெல்லாம் நன்றாக இல்லை, சிம்பனி இங்கே தோன்றவில்லை, ஆக்ரோஷமான உணர்ச்சியெல்லாம் இவர்கள் இசையில் இல்லை, எனவே இவர்கள் இசை மட்டமானது மந்தமானது என்று எளிமையாக முடித்துவிடுகிறார். ... இப்படி யாந்திரீகமாக பீத்தோவனையும் தியாகராஜரையும் ஒப்பிட முடியும் என்றால் இப்படியே நிறைய அபத்தமான ஒப்புமைகள் செய்யலாம்.

... ஐரோப்பிய தொழிலாளிக்கு இருக்கும் புரட்சியுணர்வு ஏன் இந்தியத் தொழிலாளிக்கு வரவில்லை? எல்லாம் இங்கே மந்தமானவர்கள், லாயக்கில்லாதவர்கள். இப்படிச் சொன்னால் எப்படி இருக்கும்?

... தியாகராஜரை எப்படிப் புரிந்து கொள்வது? பீத்தோவனைப் போலவே இவரது காலச்சூழலோடு இணைத்து தான். தியாகராஜர் வாழ்ந்த காலம் 18-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியும் 19-ஆம் நூற்றாண்டின் முதல் பாதியும் ஆகும். ... ஆங்கிலேயன் இந்தியாவில் நன்றாகக் காலூன்றி கசக்கிப் பிழியத் தொடங்கிவிட்டான். ... இந்திய நிலப்பிரபுத்துவ சமூகம் நாறி அழுகத்தொடங்கிவிட்டிருந்தது. தமிழ் நாட்டிலும் இதே நிலைதான். சமூகத்தின் அனைத்து வர்க்கங்களும் தெம்பிழந்து பெரும் தேக்கத்திலிருந்தன. அரசியல், பொருளாதார, சமூக, விஞ்ஞானச் சிந்தனை என்பது அப்போது இந்தியாவில் இல்லை. அப்போது சிந்திப்பவர்கள் என்பவர்கள் - கடவுள் கொள்கைத் தத்துவங்கள், இலக்கியங்கள், வேத புராணங்கள், ஓரளவுக்கு மருத்துவம் - இவற்றோடு மட்டுமே பரிச்சயம் உடையபவர்களாக இருந்தனர். ... திருவையாறு என்னும்

ஊரில் கதா காலட்சேபம் பண்ணிப்
ழைப்பு நடத்தும் ஒரு தெலுங்குப் பார்
பனக் குடும்பத்தில் பிறந்தவர் தான் திய
கராஜர். வாடிய பயிரைக் கண்டபே
தெல்லாம் வாடிய நல்ல ஆன்மாக்க
அன்று தமிழகத்தில் நிறைய பேர் இரு
னர். அத்தகையவர்களில் ஒருவர் தா
இளமையிலேயே இசைக் கலையை
பயின்று அதில் ஈடுபாடு கொண்ட தி
கராஜரும். அவருடைய ஆன்மாவுக்கு
புறச்சூழலுக்கும் இசைவு ஏற்
வில்லை. அதற்கான காரணமறியும்
றலும் அன்றில்லை. பின் சங்கீதத்
வைத்துக் கொண்டு என்ன செய்வ
அவருடைய காலத்தில் பலரும் செய்
போலவே ''ஸங்கீத ஞானமு பக்தி வி
'' என்று பக்தி மார்க்கத்தில் ஈடுபட்ட
... அவரையொத்த சங்கீத வித்வான்
பலரும் சரபோஜியின் சமஸ்தான
அரசவை சங்கீதக் காரர்களாகவும்,
னைப் புகழ்ந்து பாடுபவர்களா
இருந்தனர். ஆனால் தியாகராஜ
அவன் விவகாரமாகத் தோன்றி
உறுதியாக அவனைப் பாடவும் அ
டைய அரசவையில் கால் வைக்
மறுத்துவிட்டார். ... அதுவே
டைய பக்தி என்பது வெறும்
அலங்காரமாக அவரிடம் இ
வில்லை. உண்மையிலேயே அ
ஒரு சீரியஸான விஷயமாகத் தான்
துக் கொண்டார். அவர் நினை
தால் காஞ்சி சங்கராச்சாரியார் பே
போஜியிடம் அவர் 'கனகாபி
செய்து கொண்டிருக்கலாம். இறு
அவர் இந்த விஷயத்தில் உறு
இருந்து மறுத்துவிட்டார். ... அ
தான் அவர் ராஜனைப் பாடமா
ராமனைப் பாடுவேன் என்று செ
ருஷ்யக் கவிஞர் அலெக்சாண்ட
கின் என்பவர் ஜார் அரசனால்
புகழைப் பாடுமாறு பலவந்தப்
பட்டபோது 'கலை மக்களுக்கா
கலை கலைக்காகவே'' என்ற
பாடு லெனின் காலத்தில் பிற்போ
எழுத்தாளர்கள் புஷ்கின் சொ
கத்தைப் பலமாக பற்றிக் கொண்
கலைக்காகவே என்று வா
இதற்கு விளக்கமளித்த லெனி
கின் சொன்னது அவரது
அவரை நிர்பந்தித்த காலச்சூழ
இன்றுள்ள சூழலில் கலை ப

படிப்பகம்

www.padippakam.com

கவே, மக்களைப் புறக்கணிக்கும் கலை இன்று பிற்போக்கானதாகும் என்று Context -ஐ சுட்டிக் காட்டிச் சொன்னார். இதையே தான் நாம் தியாகராஜர் விஷயத்திலும் பின்பற்ற வேண்டும். மேலும் அவர் ராமனை வெறுமனே ஸ்துதி செய்து கொண்டிருக்கவில்லை. தன் மனப் போராட்டத்தில் ராமனை முன்னிறுத்திக் கொண்டு அவர் படைத்தவை தான் அவரது 650 கீர்த்தனங்களும். He is a dissent of his period. இந்த எதிர்ப்புணர்வு அவரது படைப்புகளில் எத்தனையோ கருத்துமுதல்வாத, தெய்வீக புராண சமாச்சாரங்களுக்கு இடையிலும், மையமாக இருக்கிறது. ...

... பீத்தோவன் அங்கே முற்போக்கானவர். இங்கே அழுகலான நிலப்பிரபுத்துவத்தின் சின்னமாக விளங்கிய சரபோஜியைப் பாடமறுத்து, பலரிடமிருந்தும் தனிமைப்பட்டு நின்ற தியாகராஜர் முற்போக்கானவர். அங்கே விறுமிக்க சிம்பனி முற்போக்கென்றால், இங்கே உருக்கமிக்க கீர்த்தனம் முற்போக்காகும். ...

**2. தென்னிந்திய செவ்வியல் இசையை முழுமையாகப் பார்ப்பனர் இசையென்று ஒதுக்கியது.**

கட்டுரையாசிரியர், செவ்வியல் இசையை பார்ப்பனர் இசையென்று கூறி நிராகரிக்கின்றார். அதனை பரந்துபட்ட தமிழ் -மக்களோடு சம்பந்தமில்லாத ஒன்றாகக் காட்டியிருப்பது சரியான முடிவன்று. மேலும் Monotony இசையை தாழ்ந்ததாகவும், Harmony இசையை உயர்ந்ததாகவும் காட்டி அதைத்தான் நாம் ஸ்வீகரித்துக் கொள்ள வேண்டும் என்று காட்டியிருப்பது மறுக்கப்பட வேண்டியவையாகும். தென்னிந்திய செவ்வியல் இசையும் மற்றெல்லா செவ்வியல் இசை முறைகளைப் போலவே பரந்துபட்ட மக்களிடம் தனது வேர்களைக் கொண்டுள்ளது என்பது தான் உண்மை. ...

தமிழகத்தில் சங்க காலத்திலிருந்தே இசை, நடனத்தைத் தொழிலாக உடைய பிரிவினர் இருந்து வந்திருக்கின்றனர். முற்காலத்தில் அவர்கள் பாணர் என்றழைக்கப்பட்டனர். அவர்கள் கையில் நமது இசைமுறைப்படுத்தப்பட்டு, செம்மைப் படுத்தப்பட்டு, வரையறை செய்யப்பட்டு வளர்ந்து வந்திருக்கிறது. தென்னிந்திய வரலாற்றில் தியாகராஜரின் கீர்த்தனங்களில் தான் அது உயரிய வளர்ச்சி பெற்றது. அதன் பிறகு அது வறட்டுத் தன்மை அடையத் தொடங்கியது. ... கட்டுரையாசிரியர் Monotony இசை என்றால் 'சலிப்பூட்டுகின்ற' என்ற ஒரு பொருள் தருகிறார். ஆனால் அதற்கு Melodious (இனிமையான, குழைவான) என்று மற்றொரு பெயரும் உண்டு. நமது செவ்வியல் இசை, நாட்டுப்புற இசை எல்லாமே Monotony இசைதான். ... தமிழர்களுக்கு வளமான இசையுணர்வை வழங்க வேண்டுமென்றால், நமது செவ்வியல் மற்றும் நாட்டுப்புற இசையினை இணைத்து வளர்க்க வேண்டும், புதுப் புது இசை வடிவங்களை உண்டுபண்ண வேண்டும். அவை எளிய மக்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளை, மனத்தைத் தமது கருவாகக் கொள்ள வேண்டும். இப்படி நமது Originallity -யின் தொடர்ந்த வளர்ச்சியாக, மாறிய காலச்சூழலை மக்கள் சார்பாக நின்று பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். இந்த வகையில் உலகின் எந்தப்பகுதி மக்களுடைய இசை முறைகளையும், நுணுக்கங்களையும் நமது மக்களின் மனத்துக்கிசையும் வண்ணம் பயன்படுத்திக் கொள்ளலாம். ...

**3. இளையராஜாவை மிகைப்படுத்திப் புகழ்ந்தது**



... இளையராஜா விஷயத்தில், ரொம்ப விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன், சினிமாக் கலாச்சாரத்தோடு - பார்ப்பனர்களோடு - ஆளும் வர்க்கத்தோடு நயமாக, ஜாக்கிரதையாக அவர் செய்து கொண்டுள்ள சமரச உறவை ஒன்றும் பெரிய குறையில்லை என்பது போன்று விமர்சித்துள்ளார்.

... தமிழ்ச் சினிமாவுக்குத் தமது இசையின் மூலம் தொண்டாற்றியவர் தான் இளையராஜா. தமிழ்ச் சினிமாவில் இசையில் இதுவரை இல்லாத நவீன பாணிகளையெல்லாம் புகுத்தி பெரும் மாறுதலையே உண்டாக்கியவர் இவர். ... ஆனால் இவருடைய எல்லா நவீன பாணிகளும் எப்போதும் போலவே தமிழன் சிந்தனையை மழுங்கடிக்கும் காதல், டூயட், காட்சிகளுக்கும், ஆபாச நடனக் காட்சிகளுக்கும் தான் பயன்பட்டன. இவர் இசையமைத்த தொண்ணூறு சதவீத பாடல்கள் மேற்கண்ட ரகத்தைச் சேர்ந்தவை தான். ... தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலிருந்து வந்தவரானாலும் தன் மக்களுக்காக இசையமைத்தவர் அல்லர் இவர். தாரை, தப்பட்டை போன்ற தம் மக்களின் இசைக் கருவிகளைப் பயன்படுத்தி, கிராமத்து மக்கள் ஆடல், பாடல் என்று சினிமாவில் காட்டப்படும் அசிங்கங்களுக்குத்தான் இவர் மெட்டு போட்டுக் கொடுத்தார். ... தனியாக அவருடைய இசையை இரசிக்க முடியும் என்று ஆசிரியர் வாதிக்கிறார். அப்படி யாரும் தனியாக ரசிப்பதில்லை. அப்படி ரசிப்பதற்கு வரிகளும், காட்சிகளும் விடப்போவதுமில்லை. இளையராஜா சினிமாவில் வரும் காட்சிகளுக்கு இசையமைக்கவில்லை, அவை இவரது மனத்தில் ஏற்படுத்தும் உணர்வுகளுக்குத் தான் இசையமைக்கிறார் என்று சொல்லுகிறார். எனவே அவருடைய மனதைப் புரிந்து கொள்ள முற்பட வேண்டும் என்றும் ஆசிரியர் சொல்லுகிறார். அப்படி என்ன உயர்ந்த மனது அவர் மனது? ...

உண்மை என்னவென்றால் தன்னுடைய இசைக்கு உறுதியான உள்ளடக்கத்தை, சமூக உள்ளடக்கத்தைக் கொடுக்காதவர் தான் இவர். முன்னெப்போதையும் விட இன்றுதான் உள்ளடக்கத்தின் அவசியம் மிக அதிகமாக இருக்கிறது. ...

... தமிழ் சினிமாவில் இவர் பரிசோதனைகள் செய்கிறாராம். விஞ்ஞானக்கூடத்தில் விஞ்ஞானிகள் அப்பாவி விலங்குகளின் உடலில் பல்வேறு இரசாயனங்களை ஏற்றிப் பரிசோதனை செய்வது போல இவர் தமிழர்களுடைய உணர்வுகளோடு பரிசோதனை செய்து விட்டு சிம்பனி அமைக்க நேராக லண்டன் ஃபிலார்மோனிக்குச் சென்று விட்டார். ... அங்கேயெல்லாம் பெரிய பெரிய மதுக்கடை பார்களில் மேற்கத்திய செவ்வியல் இசையைக் கேட்டுக் கொண்டே மதுவை இரசித்துக் குடிப்பதற்கு மிகவும் விரும்புகிறார்களாம் கனவான்கள். ... ஆக இளையராஜாவின் சிம்பனி இசை மேல்தட்டுப வர்க்கம் மது அருந்திக் கொண்டே கேட்பதற்குத்தான் பயன்படப்போகிறது. ... இவருடைய பார்ப்பன எதிர்ப்பு என்பதும் ரொம்ப குறுகிய அளவில்தான் சினிமா அரங்கில் இவர் தம் வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்படும் பார்ப்பான் இவரைத் தவுல் கம்பெனி என்றால் இவர் திரும்பி 'நீ பாடுவது நாய் குரைப்பது போல் உள்ளது' என்பார். அவ்வளவுதான். அதுமட்டுமா, இவரே தற்போது அரை பிராமணராக மாறிவிட்டிருக்கிறாரே? ... கட்டுரையாசிரியர் பண்ணைப்புரத்தில் பிறரோடு சமமாக அமர்ந்து ஒரே குவளையில் தேநீர் அருந்துவதற்கு இன்னும் போராடிக் கொண்டிருக்கும் தன் சக தோழர்களுக்கு இளையராஜாவிடம் ஹார்மனியில் ஒரு இழை கேட்கிறார். யாரும் எளிதில் நுழைய முடியாத தனி ஏ.சி. அறையில் புலித்தோலின் மீது அமர்ந்து கொண்டு ஏதாவது ஒரு உருப்படாத காதல் காட்சிக்கு ஈடுபாட்டோடு இசையமைத்துக் கொண்டிருக்கும் இளையராஜா அவரது சக பண்ணைப்புரத்துத் தோழர்களுக்காக ஹார்மனியில் அல்ல, மோனோடோனிலாவது ஒரு இழையைத் தருவாரா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

- அ. வளவன்

படிப்பகம்

www.padippakam.com

## கட்டுரையாசிரியர் பதில்

### பீத்தோவனையும் தியாகய்யரையும் ஒப்பிட்டது

தியாகய்யரை அவர் வாழ்ந்த காலத்தோடு வைத்து எடைபோடாமல் பொருத்தமற்ற முறையில் சாடியிருப்பதாக வாசகர் கூறுகிறார். மேலும், தியாகய்யர் ஏன் சிம்பனி அமைக்கவில்லை எனக் கேட்பது அபத்தமானது என்றும் ''அரசனைப் பாடமாட்டேன் ராமனைத்தான் பாடுவேன்'' என்று அவர் பாடியதும், தன்னுடைய மனப் போராட்டத்தில் ராமனை முன்னிறுத்தி உருக்கமான கீர்த்தனங்கள் இயற்றியதும் அவருடைய காலத்திற்கு முற்போக்கான நடவடிக்கைகளே என்றும் வாசகர் குறிப்பிடுகிறார்.

முதலாவதாக தியாகய்யர் ஏன் சிம்பனி அமைக்கவில்லை என்ற 'அபத்தமான' கேள்வியை நாம் எழுப்பவில்லை. ''கருநாடக இசைக்குள் உலகமே அடக்கம் என்று கர்வம் கொண்டு திரியும் சங்கீத சிரோன்மணிகளைக் குடையும் கேள்வி இது'' என்றுதான் குறிப்பிட்டுள்ளோம். அந்தக் கேள்விக்கு விடையளிக்கும் முகத்தான் பீத்தோவன் சிம்பனி அமைத்ததற்கான சமூகச் சூழலையும் தியாகய்யர் அமைக்க முடியாததற்கான காரணங்களையும் விளக்கியுள்ளோம்.

நாதப்பிரம்மம், இறையருள் என்று புரட்டித்திரியும் பார்ப்பன இசை 'மேதைகளின்' அகங்காரத்தை நொறுக்குவதே நம் நோக்கம். ராமனோ, கர்த்தரோ ஒரு கலைஞனுக்கு கலை ஆற்றலை அருள முடியாது என்றும் ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழலும் அதில் அக்கலைஞன் ஆற்றும் பாத்திரமும் மட்டுமே அவ்வாற்றலை 'அருள' முடியும் என்றும்தான் நாம் நிறுவியுள்ளோம்.

ஆனால் வாசகர் தான் கற்பிதம் செய்துகொண்ட கருத்திலிருந்து நம் கட்டுரையை விமரிசிக்கிறார். அதனால் உணர்ச்சிவசப்படுகின்றார். ''ரசியாவைப் போல நம் தொழிலாளர்கள் புரட்சி செய்யாததனால் நம் தொழிலாளர்கள் லாயக்கில்லை என்று முடிவு செய்துவிடலாமா?'' என்று கேள்வி எழுப்புகிறார்.

முடிவு செய்வது இருக்கட்டும்; அப்படி கேள்வி எழுப்புவதே பாவமா என்பதுதான் நமது கேள்வி. நாம் விரும்பவில்லையென்றாலும் வரலாற்றின் மாணவன் யாருக்கும் இந்தக் கேள்வி எழத்தான் செய்யும். அந்தக் கேள்விக்கு விடை தேடும்போது இந்தியத் தொழிலாளர்களின் 'மந்தம்' அல்ல இ.எம்.எஸ்., ஜோஷி, ராஜேஸ்வரராவ் வகையறாவின் 'துரோகம்'தான் அதற்குக் காரணம் என்ற விடையும் கிடைக்கும்.

அது மட்டுமல்ல, காலத்தின் அறைகூவலைக் கேட்கும் திராணியற்று ஒரு நாட்டின் தொழிலாளி வர்க்கம் மோனத்தில் ஆழ்ந்திருந்தால் அதனை அவர்களின் 'இயல்பு' என்று கூறி விமரிசிக்காமல் இருக்க முடியாது; அந்தச் செவிட்டுத் தனத்துக்குப் பொதுமன்னிப்பும் வழங்க முடியாது. நேர்மறையினும் எதிர்மறையிலும் வரலாறு வழங்கும் படிப்பினைகளைக் கற்றுக் கொண்டு முன்னேறுவதை நோக்கமாகக் கொள்ளாத ஆய்வு விஞ்ஞான ஆய்வு அல்ல.

தியாகய்யரை அவர் வாழ்ந்த காலச் சூழலில் வைத்தே எவ்வாறு எடை போடுவது?

தான் வாழுகின்ற சமுதாயத்துடன் ஒரு கலைஞன் முரண்படுவதும் அதிருப்தி கொள்வதும் அதிசயமல்ல; எதனால் அதிருப்தி கொள்கிறார், எந்த விசயத்தில் முரண்படுகிறார் என்பதே பிரச்சினை. மன்னன் தனக்கு ஆணையிடுவது தியாகய்யருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கலாம். அது சமூகத்தின் மேல் வருணங்களைச் சேர்ந்த இரு நபர்களின் தன்னகங்காரங்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் மட்டுமே. வேறு வார்த்தைகளில் சொன்னால், சரபோஜிக்கும் ராமனுக்கும் முரண்பாடு வந்தபோது அவர் ராமன் பக்கம் நின்றார்; அவ்வளவுதான். தங்கள் புலமைமீது கொண்ட செருக்கால் மன்னனை எதிர்த்த பண்டைத்



பாராட்டு விழா மேடையில் செம்மங்குடி சீனிவாசய்யர், இளையராஜா மகிழ்ந்து உரையாடும் காட்சி.

தமிழ்ப்புலவர்களின் துணிவுடனும் கூட இதை ஒப்பிட முடியாது. அல்லது ''நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே'' என்று 'இறைவனை'ச் சாடிய நக்கீரனின் ஆண்மையும் தியாகய்யரிடம் கிடையாது.

'பணம் பெரிதா பக்தி பெரிதா' என்ற தியாகய்யரின் மனப் போராட்டத்திற்கும் அவர் வாழ்ந்த சமூகத்தின் அதிருப்திக்கும் என்ன சம்பந்தம்?

தியாகராயரைக் காட்டிலும் காலத்தால் முந்தைய சித்தர்கள் சாதியமைப்பையும், பார்ப்பன மோசடியையும் செவுளில் அறைந்திருக்கிறார்களே. சோறு போடமுடியாத கடவுள் ஒழிந்து போகட்டும் என்றானே பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய வள்ளுவன்! விலங்கினும் கீழாய் நடத்தப்படும் மனிதர்களைக் கண்திறந்து பார்க்குமாறு ஒருமுறையேனும் தன்னுடைய ராமனை தியாகய்யர் துயிலெழுப்பியது உண்டா?

தியாகய்யரின் உருக்கம் வேறு எந்த வகையில் முற்போக்கானது? 'தான் நம்பிய கருத்துக்கு விசுவாசமாக, மனசாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்து கொண்ட கலைஞன் தியாகராயர்' என்பதுதான் வாசகருடைய வாதத்தின் சாரம்.

அதாவது நேர்மையான சநாதனி; உண்மையான பிராமணன். சக பார்ப்பனர்களைப் போன்று இரட்டைவேடம் போடாதவர்.

'சாத்திர நெறியிலிருந்து வழுவாத உண்மையான பிராமணன்' எந்தக் காலத்திலும் இல்லை. அவனைச் சோதித்து அறியும் அதிகாரத்தை சாத்திரங்கள் மற்றவர்களுக்கு அளிக்கவில்லை.

ஒரு வாதத்திற்காக வாசகரின் கருத்தை ஒப்புக் கொண்டால் 'நேர்மையான சநாதனிதான் அந்தக் காலத்தின் முற்போக்காளன்' என்பதே அதிலிருந்து கிடைக்கும் விடை. விபரீதம்!

அழுகி நாறிக் கொண்டிருந்த அன்றைய நிலவுடைமைச் சமூகத்தின் ஒரு விளைபொருள்தான் தியாகய்யர். உருவாகிக் கொண்டிருந்த பிரிட்டிஷ் சாம்ராச்சியத்திற்கு ஏற்ப டர்பன் கட்டிக் கொள்ளவும் மிலேச்சபாஷை கற்றுக் கொள்ளவும் சக பார்ப்பனர்கள் முனைந்திருந்தபோது பல நூற்றாண்டுகள் பின்னோக்கி ராமராச்சியம் நோக்கி - பயணம் செய்த மனநோயாளியே தியாகய்யர். புஷ்கின் உதாரணம் எந்த அளவுக்கு தியாகய்யருக்கப் பொருந்தும் என்பதை இனி வாசகர்கள் முடிவு செய்து கொள்ளலாம். புஷ்கினது படைப்புகள் கர்த்தருடைய சாம்ராச்சியத்தை விவரிப்பவை அல்ல.

### தென்னிந்திய செவ்வியல் இசையைப் பார்ப்பனர் இசையென்று ஒதுக்கினோமா?

முதலாவதாக, தென்னிந்திய செவ்வியல் இசையே பார்ப்பனர் இசை என்ற பொருளில் நாம் எதுவும் எழுதவில்லை. ஆனால், கருநாடக இசை என்பதே இன்று பிரதானமாக பார்ப்பனர்களால்தான் பிரபலப்படுத்தப்படுகிறது; பார்ப்பனீயக் கோட்பாடுகளால் அதன் செயல்பாடுகள் வரையறுக்கப்படுகின்றன. சமசுகிருதம் போலவே பார்ப்பனப் பண்பாட்டு மமதையின் சின்னமாகவும் கருநாடக இசை இருக்கிறது.

தமிழிசை மூலத்திலிருந்து 'நன்றி' கூறாமல் திருடப்பட்டதுதான் கருநாடக இசை என்பதிலோ, (திருடர்களில் தியாகய்யரும் அடக்கம்) செவ்வியல் தமிழ்ப் பண்களின் வேர்கள் நாட்டுப் புற இசையில்தான் உள்ளன என்பதிலோ நமக்கு மாறுபாடு இல்லை; சொல்லப் போனால் இவ்வுண்மையை பிரபலப்படுத்துவது இன்றைய அர

படிப்பகம்

www.padippakam.com

சியல், பண்பாட்டுத் தேவையாகவும் உள்ளது.

மோனாடோன் இசையைத் தாழ்ந்ததாகவும், ஹார்மனியை உயர்ந்ததாகவும் காட்டி அதைத்தான் நாம் சுவீகரித்துக் கொள்ள வேண்டுமென கட்டுரை குறிப்பிடவில்லை. மோனாடோனிற்கு குழைவான, இனிமையான இசை என்ற பொருளும் சரியே. ஹார்மனி அதனைக் காட்டிலம் முன்னேறியதும், நவீன காலத்தின் தேவையை நிறைவு செய்வதுமான வடிவம் என்பதையே நாம் கூறியுள்ளோம். நாம் சுட்டிக் காட்டியிருப்பது மோனோடோனின் வரம்புகளை; சாடியிருப்பது 'எல்லாம் வல்ல' கருநாடக இசையின் வெற்று ஜம்பத்தை.

ம.க.இ.க.வின் இசைக்குழுவினர் இசைப்பது மோனாடோனில்தான். நமது இசை மரபுகளைத் தழுவியும் அதில் காலூன்றியும்தான் புதியனவற்றை மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதிலும் நமக்கு கருத்து வேறுபாடில்லை.

**இளையராஜாவை மிகைப்படுத்திப் புகழ்ந்தோமா?**

ஒரு இசைக்கலைஞன் என்ற முறையில் இளையராஜாவின் சினிமா இசைப்பங்களிப்பு முழுவதையும் ஆய்வு செய்து எழுதப்பட்ட மதிப்பீடோ, அல்லது அவரது சமூகப் பாத்திரம் குறித்து ஆராய்ந்து அவரது சாரத்தைக் கூறும் கட்டுரையோ அல்ல நாம் எழுதியது. சிம்பனி எனும் முன்னேறிய இசை வடிவத்தை வாசகர்களுக்கு அறிமுகம் செய்யத்தான் நாம் முயன்றோமே தவிர இளையராஜாவை அல்ல.

இதுதான் கட்டுரையின் இலக்கு, வரம்பு. இந்த நோக்கம் கட்டுரையின் துவக்கம் முதல் இறுதிவரை இழையோடிச் செல்வதை வாசகர்கள் கவனிக்காமலிருக்க முடியாது.

தெரியாத ஒரு இசையை, கேட்டாலும் உடனே புரிந்து கொள்ளவோ, ஒன்றிப் போகவோ வாய்ப்பில்லாத ஒரு இசையை, இசைப் பயிற்சி இல்லாதவர்கள் புரிந்து கொள்வது எப்படி? இசையின் அனுபவத்தை சொல்லில் பகிர்ந்துகொள்ள முயன்றால் அது கவிதையாகும்; நுட்பங்களை விவரிக்க முயன்றால் அது கணிதமாகும். (இவையிரண்டையும் செய்யும் ஆற்றல் கட்டுரையாளருக்கு இல்லையென்பது வேறு விசயம்). ஏற்கனவே பரிச்சயமாயிருக்கும் இசையை ஒப்பிட்டுத்தான் அதை அறிமுகம் செய்ய முடியும். சமூகவியல் கண்ணோட்டத்திலிருந்து இசையை விளக்கும் போதுதான் விளங்கிக் கொள்வது எளிதாக இருக்க முடியும்.

வெற்றுப் புகழ்ச்சிகளாலும், தனிநபர் துதியாலும் பத்திரிகைகளை நிரப்பி அதன் மூலம் கருநாடக இசையின் 'விமரிசனத்திற்கு அப்பாற்பட்ட பரிபூரணத்தன்மை'யைப் பாதுகாக்க பார்ப்பனக் கும்பல் செய்து வரும் முயற்சியை முறியடிக்காமல் சிம்பனியை விளங்கிக் கொள்வது சாத்தியமில்லை.

இளையராஜாவின் திரையிசையிலிருந்து உதாரணம் காட்டி சிம்பனியை விளக்குவதைவிட வேறு எளிய, பொருத்தமான வழி ஏதும் கிடையாது. காரணம் - நம் அனைவருக்கும் பரிச்சயமானது திரையிசை; அடுத்து, அவர் சிம்பனி அமைக்க பயிற்சிக் களமாகப் பயன்பட்டதும் சினிமாதான்.

சினிமா இசை குறித்து கட்டுரையில் காட்டப்பட்டுள்ள உதாரணங்களின் நோக்கம் புதிய இசைமுறைகளை அறிமுகப்படுத்துவதும், தாள நயங்களைச் சுட்டிக்காட்டுவதும்தான். இல்லாத ஊருக்கு வழிகாட்டும் இசை, போகாத ஊருக்கு வழிகாட்டும் திரையிசையை விடவும் ஒன்றும் உயர்ந்ததல்ல என்பதையே கட்டுரை விளக்குகிறது.

இசைக் கலைஞன் என்ற முறையில் இளையராஜாவை ஒரு முற்போக்கு / ஜனநாயகவாதி என்று நாம் வரையறுத்துவிட்டதாகக் கற்பனை செய்து கொண்டு இவ்வாசகர்கள் எழுதுகிறார்கள். எவ்வித விமரிசனமுமின்றிப் புகழ்ந்துள்ளதாகவும், நீக்குப்போக்காக விமரிசித்துள்ளதாகவும் குறிப்பிடுகிறார்கள்.

''தனியாக அவரது இசையை யாரும் ரசிப்பதில்லை; மோசமான காட்சிகளுக்கு முட்டுக் கொடுக்கும் இசை இளைஞர்களை சீரழிக்கவே பயன்படுகிறது'' என்று சுட்டிக் காட்டுகிறார்கள் வாசகர்கள்.

இதைத்தான் 'வியாபாரம்' என்றும், இதில் சமரசத்தின் அளவைப் பொருத்துத்தான் ஒரு கலைஞனின் நாணயமும், ஆளுமையும் தீர்மானிக்கப்படுகிறது என்று நாம் குறிப்பிட்டுள்ளோம். இந்த இடத்தில் இளையராஜாவின் தரத்தை எடைபோட்டு முடிவை அறிவிக்காததைத்தான் வாசகர்கள் சாடுகிறார்கள்.

**விமரிசனமின்றியா அணுகியிருக்கிறோம்?**

''ராஜாவின் இசையெனும் நறுமலர்களால் மூடப்பட்ட மலங்கள் வாழ்வு பெற்றுவிடுகின்றன'' ''மலங்களும் குப்பைகளும் சாகாவரம் பெறுவது இப்படித்தான்'' — இவற்றுக்கு 'ராஜா சாகாவரம் அருளக் காரணம் - வியாபாரம்'' ''இசைதான் சூக்குமமேயொழிய இளையராஜாவின் உலகக் கண்ணோட்டம் சூக்குமமல்ல; அவரிடம் ஆன்மீகமும் மனிதாபிமானமும் கலந்தே இருக்கிறது'' — போன்ற வரிகளும் ''பண்ணைப்புரத்து மக்களுக்கு இப்போது தேவை சிம்பனி அல்ல; தங்கள் சோகத்தையும் கோபத்தையும் பிரதிபலிக்கும் ஒரு மெட்டு'' என்ற முடிவுரையும் பாராட்டுரைகள் என்றா இவ்வாசகர்கள் கருதுகிறார்கள்?

பார்ப்பனீயத்துடன் சமரச உறவு கொண்டு கறுப்புப் பார்ப்பனராகிவிட்ட இளையராஜாவை மிகவும் மென்மையாக அணுகியிருப்பதாக ஒரு 'அம்பேத்கரிஸ்டு' வருத்தப்பட்டுள்ளார்.

திருவரங்கம் கோயிலுக்கு 8 லட்சம் நன்கொடை கொடுத்த ராஜாவின் குற்றமும், அதை வாங்கி முடிந்து கொண்டு, கருவறையில் நுழைந்த அவரது சமூகத்தைச் சேர்ந்தவர்களை 'பறப்பயலே' என்று ஏசிய பார்ப்பனர்களின் குற்றமும் சமமா? பார்ப்பன மதத்தைத் தோலுரித்த அம்பேத்காரின் பங்களிப்பைப் பாராட்டும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் அதே பார்ப்பன ஆதிக்கத்தை நிலைபெறச் செய்யும் அரசியல் சட்ட தயாரிப்பில் பங்கேற்றதையும், மதத்தின் தேவை பற்றிய அவரது மாயையையும், ஒரு சித்தாந்தம் என்ற முறையிலேயே கம்யூனிசத்தை அவர் எதிர்த்ததையும், இந்தி தேசிய மொழியாவது பற்றிய அவர் கருத்தையும், ஆரியர் நுழைவை மறுக்கும் அவரது ஆய்வையும் — இந்தத் தவறுகள் ஒன்றுபடுத்திய சமூக விளைவுகளையும் நினைவு கூர்ந்தாக வேண்டுமா? அவ்வாறு செய்யவில்லை யெனில் அது சமரசமா?

பார்ப்பனியத்திடம் ராஜா வைத்துள்ள உறவுக்குக் காரணம் அவரது வர்க்க நலன் மட்டுமே. ஆனால் அவரை பார்ப்பனீயம் அங்கீகரிக்கக் காரணம் வர்க்கநலன் மட்டுமல்ல; சாதி, இன, மொழி ஆதிக்க நலன்களும் சேர்ந்திருக்கின்றன.

இளையராஜாவை பார்ப்பனக் கும்பல் 'தவுல் கம்பெனி' என்று கூறுவது வெறும் கேலியல்ல — சாதி ஆதிக்கத் திமிர். பதிலுக்கு இளையராஜா 'நாய் குரைப்பதாக' சொல்வதில் எந்த சாதியின் திமிர் இருக்கிறது? இளையராஜாவுக்கும் பார்ப்பனக் கும்பலுக்கும் நடைபெறும் மோதல் - அது எவ்வளவு அற்பமானதாக இருந்தாலும் - செம்மங்குடிக்கும் சுப்புடுவுக்கும் நடைபெறும் மோதலுக்கும் சமமல்ல.

இளையராஜா தமிழ்ச்சினிமாவில் பார்ப்பனியத்துக்கு எதிராக போர்ப்பறை அடிக்கவில்லைதான்; (கவனிக்கவும் - பறை அடிப்பது, வாசிப்பதில்லை) ஆனால் அவர் வருவதற்கு முன் 'பார்ப்பன சேவை'க்குக் கூட பறை பயன்படுத்தப்படவில்லையே. ஏன்? பறை ஒரு வடிவம் மட்டுமல்ல, உள்ளடக்கமாகவும் இருப்பதே காரணம். தமிழிசை, தமிழ் வழிபாடு, கருவறை நுழைவு ஆகியவற்றுக்குப் பொருந்தும் நியாயம் இதற்கும் பொருந்தும்.

அப்படியானால் அவர் பிறப்பால் தாழ்த்தப்பட்டவர் என்ற ஒரே காரணத்தால் அவரை உயர்த்துகிறீர்களா என்கிறார் ஒரு வாசகர். அவரை நாம் உயர்த்தவுமில்லை, அவரது பிறப்பு மட்டுமே அதற்கு ஒரே காரணமுமில்லை. வாசகர் கூறுவதுபோல நாம் கருதியிருந்தால் ஒரு பெட்டிச் செய்தி போட்டு வாழ்த்திவிட்டுப் போயிருக்கலாம். அதிருக்கட்டும், தாழ்த்தப்பட்டவர் இச்சாதனையை நிகழ்த்துவது அவ்வளவு சுலபமாக ஒதுக்கிவிடக்கூடிய அற்ப விசயமா என்ன?

இனி, ஒரு சினிமா இசையமைப்பாளரது இசையை, அல்லது புரட்சிக்கு உதவாத ஒரு இசையமைப்பாளரின் இசையை எப்படி சீர்தூக்குவது என்பது பற்றிய பிரச்சினை. அதைக் கண்ணை மூடிக்கொண்டு நிராகரித்துவிடுவதா?

படிப்பகம்

www.padippakam.com

## ஒரு ஈழத்தமிழர் கடிதம்

புதிய கலாச்சாரத்தில் ''ஃபிலார்மோனிக்கிலிருந்து பண்ணைப்புரம் வரை' என்ற இளையராஜாவின் சாதனை பற்றிய அறிவியல் கட்டுரை தரம் மிகுந்ததாய் இருந்தது. சரியான தருணத்தில் இக்கட்டுரை வெளிவந்து என்னை மிகவும் மகிழ்ச்சிக்குள்ளாக்கிவிட்டது. இளையராஜா தாழ்த்தப்பட்டவர் என்பதாலேயே இழிவுபடுத்தப்படும் சூழலில் அவரின் அபாரத் திறமையை திரு. மருதுவன் விஞ்ஞானரீதியாகவும், வரலாற்றுடன் எழுதியது மிகவும் பாராட்டுதற்குரியது. அவருக்கு எனது நன்றிகள், வாழ்த்துகள். கர்நாடக சங்கீதம் தான் உலகிலேயே ஒரே இசை மற்றவை எல்லாம் குப்பைகள், ஞான சூனியங்கள் என்று, உண்மையை அறியவிடாத எந்த பூணூலுக்கும் இளையராஜா, ஜேசுதாஸ் போன்ற கலைஞர்களுக்கு முன்னால் நிற்கும் அருகதை கிடையாது. இசையுலகில் இந்த பூணூல்கள் செய்த கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. திரைப்படத்துறையில் பாரம்பரிய இசையமைப்பாளர்களின் கருத்துக்களை உடைத்தெறிந்தவர் இளையராஜா தான்...

எனக்கு இசையில் நல்ல ஈடுபாடுண்டு. இத்துடன் எனது பெரியப்பா பற்றி இலங்கை வானொலி இதழில் (1970) வெளிவந்த சிறு குறிப்பொன்றும் இணைத்துள்ளேன். இவரின் குரல்வளம் பற்றி இவர் பாடலைக் கேட்டவர்கள் எல்லோரும் அருமையான குரல் என்றே கூறுவார்கள். இவரை எனக்கு தெரியாது. நான் சிறுவனாக இருந்த போது இறந்துவிட்டார். 20 வருடங்கள் வானொலியில் பாடியுள்ளார். ஆனால் இவரது இசைத்தட்டுகள் ஒன்றுமே தற்போது இல்லை. எனது தந்தையார் வானொலியில் செல்வாக்குள்ள நபர்கள் மூலம் இவரின் பாடல்களைத் தேடினார்.



ஈழக் கலைஞர் குழந்தைவேலு

எல்லாம் கிறுக்கப்பட்டுவிட்டன என்பது தெரியவந்தது.

ஏன்? அவர் தாழ்த்தப்பட்டவர்களின் சமூகத்தில் பிறந்தார் என்பதாலேயே. இவரின் குடிப்பழக்கத்தை சாதகமாக்கி, நிலைகெட்டநிலையில் அவரை (உயர் சாதியினர்) ரயில் தண்டவாளத்தில் கிடத்தினர். ஒரு கையும் காலும் இழந்து உயிர் தப்பினார்; சில காலம் கழித்து சுகயீனம் காரணமாக இறந்தார் (42-வது வயதில்). இவர் சங்கீதம் படித்தது கொஞ்சம் காலம்தான். அதுவும் (சங்கீத வாத்தியாரின்) வீட்டுக்கு வெளியில் நின்றுதானாம். என் அப்பாவும் நன்றாகப் பாடுவார். வெளியில் நின்று படிக்க அவர் விரும்பவில்லை. சாதிக் கொடுமையால் பாதிக்கப்பட்டு 60-களில் தீண்டாமைக்கு எதிராகப் போராட்டங்களில் என் அப்பா கலந்து கொண்டார். தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடிய தலைவர் கே.டானியல் அப்பாவின் நெருங்கிய நண்பர். டானியல் மறைந்த பின் அப்பா தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் செயலராக இருந்தார். ஈழப்பிரச்சனை எழுந்ததும் அதன் செயல்பாடுகள் அற்றுப் போனது. இப்பின்னணிகளுடனேயே நன் வளர்ந்ததால் தங்கள் கருத்துக்களுடன் ஒத்துப் போக முடிகின்றது. நாம் தளர்ந்து விடக் கூடாது.

— சௌந்தர், டென்மார்க்.

வர்த்தக சினிமா, சநாதனத்தில் தோய்ந்த சாஸ்திரிய இசை, 'கலை - கலைக்காகவே' என்ற கூட்டம் - இந்த மூன்று முகாம்களில் முதலாவதிலிருந்து மட்டுமே நாம் நேர்மறையிலும் எதிர்மறையிலும் கற்பது சாத்தியம்.

ஹார்மனி என்னும் புதிய இசை முறையை நமது மரபுடன் சேர்த்துத் தருவதில் இளையராஜா வெற்றி பெற்றுள்ளார் என்றால் அதிலிருந்து நாம் ஏன் நேர்மறையிலும், எதிர்மறையிலும் கற்கக் கூடாது? ஆன்மீகத்தில் ஊறிய கருநாடக இசை மரபிலிருந்தும் கற்க முடியும் என்று கூறும் வாசகர் வாழ்வியலுடன் தொடர்பு கொண்ட திரையிசையை நிராகரிப்பது எப்படி?

காட்சிக்கும் இசைக்கும் கலைத் தரத்தில் உள்ள இடைவெளியை நாம் சுட்டிக் காட்டினால் 'அப்படி என்ன உயர்ந்த மனது அவர் மனது' என்று கேள்வி எழுப்புகிறார் வாசகர்.

குறிப்பிட்ட பாடலுக்காகவும், காட்சிக்காவும் அமைக்கப்பட்ட இசை, தன்னுடைய கலைத்தரத்தில் அவற்றைக் காட்டிலும் உயர்ந்து நிற்பதைத்தான் நாம் குறிப்பிடுகிறோமேயொழிய அவரத மன உணர்வுகள் உயர்ந்து நிற்பதாகக் கூறவில்லை. உளவியல் பகுப்பாய்விலும் இறங்கவில்லை.

நாம் முன்னரே குறிப்பிட்டதைப் போல இளையராஜாவின் இசையில் ஆன்மீகமும், உலகாயதக் கண்ணோட்டமும் கலந்தே இருக்கிறது. அவரே ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருப்பது போல 'ஆன்மீகம் சார்ந்த கருநாடக இசை லௌகீகம் சார்ந்த சிம்பனியை அமைக்க உதவவில்லை'. இதில் வாழ்வியல் சார்ந்த அம்சங்களை நாம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதால் ஆபாசத்தையும், அற்ப உணர்வுகளையும், ஆன்மீகம் சார்ந்த அவரது இசையையும் இசை குறித்த கண்ணோட்டங்களையும் ஏற்றுக் கொள்வதாகப் பொருளில்லை. அதற்கு அவசியமுமில்லை. அப்படி ஒரு ஐயம் வாசகர்களுக்கு ஏற்படுவது நமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. அவர் அமைத்திருக்கும் அல்லது அமைக்கவிருக்கும் சிம்பனிகளின் உள்ளடக்கம் புரட்சிகரமானதாக இருக்கும் என்றும் நாம் உத்திரவாதம் எதுவும் வழங்கவில்லை.

பண்ணைப்புரத்தில் போராடும் தம் சக தோழர்களுக்கு இளையராஜாவின் ஹார்மனியில் ஒரு இழையேனும் தருமாறு நாம் கோருவதாக வாசகர் கூறுகிறார். அத்தகைய மாயை நமக்கும் இல்லை; இந்த கட்டுரைகளைப் புரிந்து கொள்ள முடியாத பண்ணைப்புரத்து விவசாயிகளுக்கும் இல்லை. பண்ணைப்புரத்தையும், பெரும்பான்மை மக்களையும் பொருத்தவரை சிம்பனி - அது எவ்வளவு முன்னேறிய வடிவமாக இருப்பினும் - அந்நியமாகி நிற்பதைக் குறிக்கவே அது எழுதப்பட்டுள்ளது.

ரகுமானும் ராஜாவும் ஒன்றுதானே என்று கேட்டிருக்கிறார் இன்னொரு வாசகர். அப்படியானால் ராஜாவும் மைக்கேல் ஜாக்சனும் ஒன்று என்றுதான் பொருள். இருவரது இசைக்கும் உள்ள வேறுபாட்டை நாம் இங்கே விளக்கப் போவதில்லை. அதை ரகுமானே செய்வார்; செய்து கொண்டுமிருக்கிறார்.

''பீத்தோவனின் சிம்பனியை ஐரோப்பிய மேட்டுக்குடியினர் மதுக்கடைகளில் கேட்டவாறே குடித்துக் கொண்டிருக்கின்றனர்'' என்கிறார் வாசகர். அவ்வளவு ஏன்? பீத்தோவனின் புரட்சிகரமான 9 வது சிம்பனியை ஹிட்லர் தனது 'பாசிச எழுச்சி'க்குப் பயன் படுத்திக் கொண்டான். என்ன செய்ய? அது இசையின் சூக்குமநிலையால் தோன்றும் தவிர்க்கவியலாத விளைவு. பார்ப்பனியத்தைக் கேலி செய்ய நாம் பயன்படுத்தும் நையாண்டி மெட்டிலேயே முஸ்லீம்களைக் கேலி செய்யும் பாடலை பாரதீய ஜனதாவினர் பாடமுடியாதா என்ன?

விஞ்சி நிற்பது ஒரே கேள்வி. இளையராஜாவின் இசையில் அப்பட்டமான சீரழிவு போக மற்றவை சில நம்மை ஈர்க்கின்றனவா இல்லையா? ஆம் எனில் அதற்குக் காரணம் அவரது இசையின் வலிமையா, அல்லது நமது பலவீனமா?

இதைத் திறந்த மனதுடன் ஆய்வு செய்வதா? அல்லது சீரழிவுக்குச் சேவை செய்யும் ஒரு இசையமைப்பாளன் சிம்பனி அமைத்துவிட்டானே, இதன் சாத்தியத்தை எப்படி விளக்குவது என்று அஞ்சி எதுவுமே நடவாதது போலக் கண்ணை மூடிக் கொள்வதா?

ஆய்வில் இறங்குவோமானால் நாம் தவறிழைக்கக்கூடும், ஏச்சுக்கு ஆளாகக் கூடும். கண்ணை மூடிக் கொண்டால் இத்தகைய ஆபத்துகளைத் தவிர்க்கலாம். எனினும் பூனைகளின் பார்வை மார்க்சியப் பார்வை அல்லவே!

● மருதுவன்

படிப்பகம்

www.padippakam.com

● சிறுகதை:

# மூளைச் சலவை

"தோ, பயனி ஓரமா கண்டுக்காம போறியே வழி மறந்துருச்சா?" பழனி என்னதான் ஓரமாய் தலையைக் குனிந்து கொண்டு போனாலும் முதுகில் இருக்கும் மூட்டையே நடமாட்டத்திற்கு சாட்சி சொல்லும். அழுக்குத் துணிகளை மூட்டையாய்க் கட்டி முதுகில் வைத்து கழுத்தில் முடிச்சு போட்டுக் கொண்டு இரண்டு கைகளாலும் பிடித்தபடி குனிந்து நடந்து நடந்தே அவன் உடம்பு வில்லாய் வளைந்திருந்தது. கழுத்தைச் சாய்த்து செல்வராசைப் பார்த்து வெற்றிலைச் சிவப்பு வழிய புன்னகைத்துவிட்டு அடியெடுத்துவைத்தான்.

"ஓகோ, அவசர வேலையா. பெரியெடத்து பழக்கமெல்லாம் இருக்கப்ப என்னத் தெரியுமா உனக்கு." செல்வராசு கிண்டலாய் தொடர்ந்தான். அதற்குமேல் நடையைக்கட்ட பழனிக்கு விருப்பமில்லை.

"அட! நீ வேற பெரிய எடம், பெரிய எடம்னு. பெரிய எடத்துலதான் அழுக்கு அதிகம். நாழியாச்சுன்னு போனா கதகட்றியே", தொழில் முறையான அனுபவங்களை பழனி தத்துவம்மாதிரி அடிக்கடி பேசுவதுண்டு.

"ஆமாம் உனக்கும் எனக்கும் கலெக்டர் வேல கரெக்டா நேரத்துக்கு போக போறியா.. டிய குடி..".

"கலெக்டரு என்ன கிழிக்குறானா. நமக்குதாண்டா நாய் பாடு". முத்துசாமி வந்து குறுக்கிட்டான். பழனி ஆமோதிப்பது போல் சிரித்துக் கொண்டான்.

"யேய் முத்துசாமி இப்ப மரமேர்றது இல்லயா... தெருபக்கம் ஆளையே காணோம்".

"யாரு நானா, நீ இல்லேன்னு சொல்லு. இப்ப கூட அய்யிரு ஊட்ல இருவது காய் பறிச்சிபோட்டுதான் வந்தேன்".

முத்துசாமி வேறுஏதோ சொல்ல வந்து நினைவு வந்தவனாய் "அய்யிரு ஒன்ன பாத்தா ஒடனே வரச்சொன்னாருய்யா... துணி கெடக்காம்".

"ஊம் போவணும்".

"அய்யே அழுத்துக்குற. சொன்னேல்ல டீ வாங்கி குடேன்", முத்துசாமி உரிமையோடு நச்சரித்தான்.

"எளசுங்க பெரிசுங்களுக்கு வாங்கித் தாறது போயி நீ இப்ப என்ன கேக்குற... பரவால்ல ஒப்பன் மாதிரி சாராயத்த குடிச்சு ஒழியாம.. டீயோடு நின்னுகிட்டியே. குடிக்சுத்தொல.. செல்வராசு இன்னொரு டீ போடு", வெற்றிலைப் பாக்கு பொட்டலத்துக்கடியில் சில்லறையாய் பொறுக்கி கொடுத்தான் பழனி.

"ஏன்ய்யா வர வர மூட்ட சின்னதா போவுது", முத்துசாமி கிண்டலாய் கேட்டான்.

"ஆத்லயும் தண்ணி கெடயாது. இடுப்பொடிய ஊத்தம் போட்டு வச்சா காலு கழுவி நாசம் பண்றானுவ. நம்பால முன்னமாதிரி முடியல்லப்பா. பயலும் கூடமாட ஒத்துவரமாட்டேங்குறான். துணி எடுத்துகுறத கொறச்சிட்டேன்... வயசு எழுவது ஆவுது தெரியுமில்ல. ஒன் வயசுலல்லாம் இக்கரையில வெளுக்குற சத்தம் அக்கரை தாண்டி கேக்கும். இப்ப முடியல....."

"அதான் ஆத்து பக்கம் காணமா இப்ப எங்க கல்லு போட்ருக்க. பாலத்தடியிலும் காணும்".

"பாலத்தடியிலே ஒரே நரகலு. மேலக்காவிரி பக்கம் போட்ருக்கேன். நாலு நாளா வெளுக்கப் போவுல. இன்னியதன்னியும் கோழி கூவுறப்ப கூட போவலாமா, வேணாமான்னு ரோசனதான். கைல காசு இல்ல கெளம்பிட்டேன். போய் அய்யரன்னாச்சும் பாக்குறேன்", வாத்துமாதிரி நடையைப் போட்டு கிளம்பினான் பழனி.

பழனியின் கூப்பாடு கேட்டு விசாலாட்சி மாமி முற்றத்திலிருந்தபடி எட்டிப்பார்த்தாள். "யாரது பழநியா, வாடாப்பா உனக்கு வந்த கிராக்கி. இப்பதான் வழி தெரிஞ்சுதா?!"

"இல்லம்மா ஒடம்புசரியில்ல. அதான் வெளுக்கவே கிளம்பல", தப்பு செய்தவன் போல கூனிக்குறுகி குழைந்தான்.

"தோ பாருங்கோ பழனி வந்துருக்கான்", விசாலாட்சி மட்டுமல்ல அவளுடைய பதினைந்து வயது பையன் கூட, "பழநி வந்துட்டான்," என்று சொல்வதுதான் வெளிப்படையான மரியாதை. மற்றபடி "எங்க அந்த வண்ணாறப்பயல காணோம்?" என்பதுதான் தெருவில் பொதுவான மரபு. நெற்றியில் தேசியக்கொடியை பறக்கவிட்டதுபோல மூன்றுபட்டையும் குங்குமமுமாக சீனிவாசன் வெளிப்பட்டார்.

"வாடா பழநி பதினஞ்சு நாளாறது எட்டிக் கூட பாக்ல",

"அம்மா கூட கோவிச்சாங்க, ஒடம்பு சரியில்ல, மனசும் சரியில்ல சாமி, அதான் எங்கயும் துணி எடுக்கவர்ல"

"மனசு நல்லால்லேன்னு பொழப்பவுடலாமா, அப்படி என்னடா கவல?"

"முன்னமாதிரி வெளுக்கவும் முடியல, பையனும் ஒரு உதவி ஒத்தாசை பண்ணாம ரோதன பண்றான். வெளுக்கலாம் கூட வாடான்னா. சைக்கிள் கடைக்கு போறான். காலைல போயிட்டு ராவு வரைக்கும் இருந்துட்டு அஞ்சுருவா வாங்குறான், அப்புடியே செட்டு சேந்துட்டு ரெண்டாட்டம் சினிமாவுக்கு போயிடறான். பொறுப்பே இல்ல".

"எல்லாரும் வயசுல அப்புடிதான், நாள்பட்டா சரியாயிடும். அவன் போக்குக்கு வுட்டுதான் புடியண்டா."

"சரி போ தொலையுறான்னா, ஒரு வாரமா மெட்ராஸ்லந்து அவன் மாமன்காரன் 'குடும்பத்தோட இங்க வந்துடுங்க பொழப்பு இருக்கு'ன்னு கடுதாசி போட்டதப் புடிச்சிகிட்டு 'என்னா முடிவு அங்கேயே போயிடலாம் வா'ன்னு பிரச்சனை பண்றான். இருடா ரோசனை பண்ணி செய்யலாம்னா இங்க என்ன உன் அப்பன் ஆஸ்தி இருக்கான்னு தெனம் வம்பு பன்றான்', ஒரெடத்துல நின்னுகிட்டு தேச்சாலே அம்பது சம்பாதிக்கலாம். நானும் கம்பெனி வேலைக்கு போவலாம் வா'ன்னு பறக்குறான். ஒரு நேரத்துல போயிடலாம்னு பட்டாலும், முன்னபின்ன தெரியாத ஊருக்குப் போய் பொழக்க ரோசனையா இருக்கு சாமி". அப்பாவித்தனமாய் கேட்டுவிட்டு அய்யரின் வாயையே இமைக்காமல் எதிர்பார்த்தான் பழனி.

"அப்பன், பாட்டன் காலத்லேந்து பழகின ஊர்லயே கஷ்டப்படறச்சே, மெட்ராஸ் போய் என்னடா பண்வ. பேப்பர்ல என்ன போட்ருக்கான் தெரியுமா.. அங்க குடிக்கக் கூட தண்ணி இல்ல. நெய்வேலியிலிருந்துதான் போறதாம். இந்த லட்சணத்துல நீ என்னத்த பொழப்ப ஓட்றது. உன் புள்ளையாண்டாந்தான் என்ன பெரிசா படிச்சிருக்கான் கம்பெனில வேலபாக்க. இங்கயாவது முகம் தெரிஞ்சவூர்ல அவசரத்துக்கு அஞ்சு பத்து எங்கிட்டயோ, புள்ளைகிட்டயோ வாங்குற. நேக்கு என்னவோ மெட்ராஸை பத்தி அபிப்ராயமில்ல. பொறந்த மண்லயே உன், பாட்டன், அப்பன் காலமெல்லாம் ஓடிடுத்து, உனக்கு மட்டும் என்ன வந்துடுத்து இப்போ. அவன்தான் சின்னவன், நீ புத்தி சொல்றது விட்டுட்டு. நீயும் யோசிக்குறேங்குற. என்னவோ போ நேக்கு படறத சொல்றேன்."

"சரிதான் சாமி எனக்கும் போகணும்னு புடிப்பு இல்ல, இந்தப் பய அப்பவாவது உருப்புடுவானோன்னு நெனச்சேன். இருந்தாலும் பொறந்த மண்ணவுட்டு போயி லோல் பட முடியாது சாமி.

படிப்பகம்

www.padippakam.com

கொற காலத்துக்கும் இங்கயே இருந்துட்டு மண்டையப் போட வேண்டியதுதான்... சாமியெல்லாம் இருக்குற வரைக்கும் எம் பொழப்புக்கு என்ன''.

''இது பெரிய விஷயம்னு யோசிக்காதடா. உன்பையன் வளரும் பயிர். நீதான் பக்குவமா சொல்லணும். கைமேல தொழில் இருக்கு அப்பன்கூட வந்து நாலு காசு சம்பாதிக்கறது வுட்டுட்டு, ஏண்டா நாள் முழுக்க போயி சைக்கிள் கடைல விழுந்து கெடக்குறேன்னு சொல்லு.. தோ பாரு பத்துநாளா துணிகெடக்கு. வெளுத்திருந்தா காசுதானே... என் பையன்கூட முந்தினநாள்தான் அமெரிக்காலேந்து வந்தான், ட்ரெஸ்லாம் கெடக்கு''.

''தம்பி வந்தது தெரியாதுங்களே.. இருக்கா சாமி'',

''தூங்கிண்டுருக்கான்''.

''சாமி தூங்கட்டும் அப்புறம் பாக்றேன், துணிய வெளுத்து பையன் கைல கொடுத்தனுப்புறேன். நீங்களாவது அவனுக்கு எடுத்துச் சொல்லுங்க, நீங்க சொன்னா கேப்பான்'',

''ஆங், அனுப்பு அனுப்பு.. வர்றப்ப வேற துணியும் தர்றேன்'',

''தந்துவுடுங்க சாமி.. பையன அனுப்புறேன் வரட்டுங்களா''.

துணியை வாரிக்கட்டிக் கொண்டு நேரே மகாலிங்கம் பிள்ளை வீட்டுக்கு நடந்தான்.

''சாமி சாமி!''

''அட வாடா பிரதமரையே பாத்துடலாம் போலஇருக்கு. உன்னை பாக்கமுடியல, உன் புள்ளையை சைக்கிள் கடைல பாத்து வரச்சொல்லுன்னேன். சொன்னானா?''

''திமிரெடுத்த பய சொல்லுலசாமி, இப்பகூட அய்யரோட அவனபத்திதான் பேசிட்டிருந்தேன். தொழிலுக்கு ஒத்துவர மாட்டேங்றான். மெட்ராஸோட வேற போவலாம்னு சண்டை புடிக்கிறான். என்னால ஒடம்பும் முடில அதான் சாமி வரல''.

மகாலிங்கம் பிள்ளை வேகமாக எதையோ சொல்ல வந்தவர் சமாளிப்போடு வெற்றிலையில் சுண்ணாம்பு தடவிக்கொண்டு பக்குவமாக ஆரம்பித்தார். ''பழ்னி மெட்ராஸே தண்ணி இல்லாம தவிக்குது. கேட்டுப்பாரு எம் பொண்ணு கூட மெட்ராஸ்லேந்துதான் வந்துருக்கா. தண்ணிக்கு மகா கஷ்டம். இதுல நீ வேற பொழக்க போறேங்குற''.

''பாப்பா வந்திருக்கா, வீட்டுக்காரு நல்லா இருக்காரா'', வாஞ்சையோடு பழனி விசாரித்தறிந்தான்.

'ஆங் பிரசவத்துக்காகத்தான் வந்துருக்கா. முன்னெல்லாம் ஊர்ல பிரசவம்னா என்ன தவிர யாரும் துணிய தொடக்கூடாதுன்னு உரிமையா சண்டைபிடிப்பானாம் உன் அப்பன்.''



படிப்பகம்

www.padippakam.com

''அட! இப்ப மட்டும் என்னசாமி. நானில்ல, ஒடம்பு முடியலேன்னாலும் நம் மூட்டுக்கு செய்யாம போயிடுவேனா வேற துணி இருந்தாலும் தாங்க சாமி'',

''அதில்லடா, நாளைக்கே நீ மெட்ராஸ் போயிட்டேன்னு வச்சிக்க, வேறாள தேடனும். எதுக்கும் சொல்லிட்டுப்போ'', இடக்காகப் பேசினார் மகாலிங்கம்.

''நீங்க வேறசாமி, எல்லாம் இக்கரைக்கு அக்கரை பச்சை. நமக்கு இந்த ஊர வுட்டா பொழப்பு ஏதுங்க? என் பையன்தான் புத்திகெட்டுப்பேசுறான்னா. நான் போயிடுவேனா''.

''ஏய் பார்வதி, அந்த ஜரிகை வேட்டி, ஜிப்பா, துண்டு, ரேணுகா பொடவை இருந்தாகூட போடு''.

துணி சேர்ந்து சதை போட்டு மூட்டை பெரிசானது.

''சாமி வரட்டுங்களா,''

''ஆங் வா வா''.

''ஏங்க, ரேணுகா புள்ள பேறுக்கு இந்த வண்ணாத்திய உதவிக்கு கூட்டுக்கலாம்னு இருந்தா, இவன் வேற ஊரைவிட்டுப் போறேன்ங்குறான்'', பார்வதிக்கு இன்னம் சந்தேகம் தீரவில்லை. அவள் முகம் இருண்டு இறுகிக்கிடந்தது.

''அவன் எங்கடிப் போகப்போறான். அவன் பையன் அந்த அகராதி ஏதோ சொல்லிருப்பான் போல இருக்கு.. போனான்னா வீட்டுக்கு வீடு கெடைக்குற மிச்ச சோத்துக்கும் வழி இருக்காதுன்னு அவனுக்குத் தெரியும். இந்த அம்பட்டன் பயலெல்லாம் இப்புடித் தான் ஒவ்வொருத்தனா பட்டணம்னு போயிட்டானுக, இப்ப இவன் புள்ளை தூண்டி விட்ருக்கான். எவன் ஆயிரம் சொல்லட்டும் இவன் நம்ப பேச்சுக்கு மறுபேச்சு பேசமாட்டான். நான் மெட்ராஸை பத்தி சொன்னேனா நான் போகல சாமின்னுட்டான்'' மகாலிங்கம் பிள்ளை சொல்லச் சொல்ல பார்வதியின் முகத்தில் நம்பிக்கை மறுபடி சுடர்விட்டது.

● ●

வெள்ளாவி வைத்துவிட்டு மளமளவென்று வேலையைப் பார்க்காமல் பழனி குறுக்கும் நெடுக்குமாக நடந்து புலம்பித்தீர்த்தான். ''பரதேசி பயலுக்கு என்னா திமிரு இருந்தா இப்புடி பேசிருக்கும்''.

''அட! பேசாம கெடயேன். கயனி தொட்டில விழுந்த எலி மாதிரி நீ வேற கலகலக்குற. அவன் வந்தோன்ன பொறுமையா கேளு'',

''உன்ன மிதிச்சா சரியா போயிருண்டி.. பேசாத பேசாதன்னு என் வாயை அடக்கியே அவன கெடுத்துட்ட.. இப்ப நாயி இடம் தெரியாம கொலைக்குது'',

''விடிஞ்சா ஓங்களோட பெரிய ரோதனையா போச்சு இப்ப என்ன சொல்லிட்டான். மெட்ராஸ்தான போவுணுங்குறான் விடேன்''.

''போடி அறிவுகெட்ட மாடு.. இந்தப்பய இப்புடி திரியறான அய்யிருகிட்ட போனா நல்ல புத்தி சொல்லுவாரேன்னு துணிய குடுத்து அனுப்பிச்சா சாமிகிட்ட என்ன பேசிருக்கான் தெரியுமா இவன்'' பழனி சொல்லிச் சொல்லி கொதிப்படைந்தான்.

''தோ பாரு அவன் வர்றான். நான் பேசிக்குறேன் நீ ஏதும் குறுக்க வந்த பல்லு போயிடும் ஆமாம்'',

''அப்பன் புள்ளையா தெரியல பங்காளி மாதிரில்ல நிக்குற. எந்த கதியாவது போங்க'', பஞ்சவர்ணம் மூக்கைச் சிந்தியபடி முந்தானைக்குள் முகம் புதைத்தாள்.

''எங்கடா போயாற?'' கேட்..தில் ஆவேசமிருந்தது.

குமாரும் பதிலுக்கு சூடாகப் பார்த்தான். ''கடைக்கு''.

''கடைல கிழிக்குதா. அய்யிருவூட்ல துணிய கொடுத்துட்டு பழந்துணிய எடுத்துட்டு வாடான்னா. நீ பாட்டும் துணிய கொடுத்துட்டு மயிராச்சுன்னு போயிட்டியா ..''.

''தோ பாரு மரியாதை கொ(..)துப் பேசு.. சும்மா அந்த அய்யிரு சொல்றத கேட்டு பேசாத''.

''சே அந்த அய்யிரப் பத்தி பேசாதடா நாயே.. நீதான் எங்கிட்டயே எகுர்றியே அவுருகிட்ட பாய மாட்டியா பின்னே...''.

''என்னா பாஞ்சிது அவுரு கேட்டதுக்குப் பதில் சொன்னிச்சி''.

''என்னாடா பெரிய பதிலு. ஏண்டா இப்புடி பொறுப்பில்லாம இருக்கியே உங்க அப்பனோட தொழில் பாத்தா என்ன? மெட்ராஸ் போயி என்னடா பண்ணப் போற? பொறந்த பூமிதாண்டா நம்ப தெய்வன்னு அவரு சொன்னா, ஓங்க புள்ளைய மட்டும் அமெரிக்காவுக்கு அனுப்புலியான்னு கேட்குறியே. உனக்கு என்னா வாய்க் கொழுப்பு?''

''நீ சும்மா மேலமேல பேசாத.. நீ என்னா கலெக்டருக்கா படிச்சிருக்க மெட்ராஸ்ல வேல தேடுன்னு அந்தாளு கிண்டலடிக்குறான், பின்ன என்ன அவனுங்க மட்டும் வெளியூரு போறானுக... நாம போனா பொழைக்க முடியாதா... இத கேட்டா திமிரா?''

''சொன்னா என்னடா தப்பு? நீ என்ன பி.ஏ.வா படிச்சிருக்க. காலகாலமா நம்ப பொழப்பு அவுக தயவுலதாண்டா. அவங்க எச்ச சோறு தின்னுதா நீயும் வளர்ந்த... அஞ்சு ரூவா சம்பாதிச்சதுமே அவ்வளோ திமிரா வந்து ஆடுது''

''தோ பாரு நீ வேண்ணா அந்த எச்சசோறு தின்னு. எனக்கு பொழக்கத் தெரியும். அந்தாளு ஒனக்குதான் பெரிசு. எனக்கில்ல''

''என்னடா சொன்ன நாயே... சாமி இவ்வளவுக்கும் பொறவு ''வுடு சின்னப்பய''ன்னு சொன்னதே என் மனசு ஆறல. இன்னமும் நீ அந்தாளு. இந்தாளுங்கற. மரியாதையா பேசுனது தப்புன்னு அய்யிருகிட்ட போயி மன்னிப்பு கேட்டு படில கால வைய்யி''

''இந்த வேலல்லாம் எங்கிட்ட காட்டாத, அந்தாளு என்ன பெரிய மனுசனா? அப்பன் புள்ளைய மோதவுடறான். அவன் அழுக்குத் துணியத் தூக்கி தூக்கி உன் மண்டையிலயும் அதான் இருக்கு''

''போடா எச்சக்கல நாய... என்னா திமிரு இருந்தா என்கிட்டேயே அய்யர அவன் இவன்ம்ப, அதான் பிள்ளையும் உன்னபத்தி கரெக்ட்டா சொன்னாரு''

''ஆமாம் ரெண்டு பேரும் பெரிய இவனுக''

''எடுறி அந்த வெளக்க மாறை''.... பழனி வெறி கொண்டது போல குமாரின் கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டான்.

பஞ்சவர்ணத்தால் மேலும் பார்த்துகிடக்க பொறுக்கவில்லை.

''நல்லா இருக்கு நீ தோளுக்கு ஒசந்த பையன வெளக்கமாத்தால அடிக்கிறதும், அவன் திருப்பி கைய ஓங்கறதும். எனக்கு மூச்சு அடங்க மாட்டேங்குதே...'' அழுது புலம்பினாள்.

''நாயே இன்னம படி ஏறாதடா''

''போயா உன் வீடும் நீயும்... ச்சீ...'' காரித்துப்பிவிட்டு, குமார் நடையைக் கட்டினான். அரைமணி நேரத்தில் வீடே கலவரப்பட்டிருந்தது. பஞ்சவர்ணம் வழக்கம் போல அடுப்பு மூட்டாமல் செதும்பிக்கொண்டு கிடந்தாள். பழனிக்கு ஒரு பக்கம் ஆத்திரம், மறுபக்கம் பையனை அடித்தது மனசை மெல்ல மெல்ல உறுத்த ஆரம்பித்தது. துணி மூட்டையிலேயே தலையை கைவைத்து சாய்ந்து ஓய்ந்தான். ஊரிலுள்ள அழுக்கெல்லாம் அவன் மூளையிலும் இருப்பதைப் புரிந்து கொள்ள முடியாதவனாய் அப்பாவித்தனமாய் கண்கள் கசிந்தான்

பஞ்சவர்ணம் செதும்பலுக்கிடையே பேசினாள் ''தே! நல்லாதான் செபனேன்னு கெடக்க. பொழுதும் ஆயிடுச்சி. புள்ளைய காணோம். போயிதான் பாரேன். அடிச்சிகிட்டா அப்பன் புள்ளை இல்லாம போயிடுமா... இப்ப நீ போகலேன்னா நான் போறேன்'' இமைகளில் நீர் முட்டி வார்த்தைகள் உடைந்து விழுந்தன.

''கழுதை, எனக்கு மட்டும் இல்லையா... இப்படியே திரியுறான்னு பார்த்தா ஊர் பொல்லாப்ப வாங்குறானே.. அய்யரையும், பிள்ளையையுமே எடுத்தெறிஞ்சு பேசுறானே.. இன்னும் எப்பதான் புத்திவருமோ... கோவந்தான் வருது. நான் சைக்கிள் கடைல இருக்கானான்னு பாத்துட்டு வர்றேன். நீ சோற பொங்கு... நெத்திலி வாங்கி வறு. ரெண்டு உருண்டை கூட திம்பான்''.

மாறிவரும் சூழ்நிலையை விளங்கிக் கொள்ள முடியாத அவன் மனசு மாதிரியே கால்களும் நடுக்கத்துடன் சைக்கிள் கடைப் பக்கம் அடியெடுத்தன.

– துரை. சண்முகம்

படிப்பகம்

www.padippakam.com

# காஞ்சி மடாதிபதிகளின்
# சங்கரா லீலை

“லோகத்திலேயே உயர்ந்த, தெய்வத்துக்கு சமமான குருவுக்கு, லோகத்திலேயே உயர்ந்த பொருளான ஸ்வர்ணத்தால் அபிஷேகம் செய்கிறோம். இது நமக்குக் கிடைத்த பெரும் பாக்கியம்'' என்று சொல்லிவிட்டு கூடை கூடையாகத் தங்கக் காசுகளை பெரிய சங்ராச்சாரியின் தலையில் கொட்டினார் நடு சங்கராச்சாரி.

கடந்த மே 7-ம் தேதியன்று நடைபெற்ற இந்த கனகாபிஷேகத்தை தொலைக் காட்சியில் பார்க்கின்ற 'பாக்கியத்தை' நமக்கெல்லாம் அருளிவிட்டு, அந்த தங்கக் காசுகளைச் **சேர்க்கின்ற** பாக்கியத்தை நடு சங்கராச்சாரியும், ஜூனியர் சங்கராச்சாரியுமே வைத்துக் கொண்டுவிட்டனர்.

அடுத்தடுத்து இந்த தங்கக் குளியல்கள் (கனகாபிசேகங்கள்) நடந்தன; சென்னை மக்கள் தண்ணீரில் குளிப்பதற்கே வழியின்றித் தவிக்கும் போது முற்றும் துறந்த முனிவர் தங்கத்தில் குளிக்கலாமா என்று கேட்டோம்; முற்றும் துறந்தவர்களைக் குற்றம் சொல்வதா என்று குதித்தார்கள்.

மாதச் சம்பளக்காரனின் மென்னியை நெறித்து, வருமான வரி வசூல் செய்யும் அரசாங்கம், இந்த மகா முனிவர்களிடம் வரிவசூல் செய்யாத காரணம் ஏனோ என்றோம்; பற்றறுத்தவர்களிடம் பணம் வசூலிப்பதா என்று பதைத்தார்கள்.

சொர்க்கத்திலிருந்தா கொட்டுகிறது சொக்கத் தங்கம்? தங்கத்தை வாரித்தந்த 'வள்ளல்களின்' பட்டியலையாவது வெளியிடுங்கள் என்று வேண்டினோம். 'வெளிநாட்டிலிருந்தெல்லாம் விமானத்தில் வருகிறதாக்கும்' ரிஷிமூலமும் நதிமூலமும் பார்க்கக்கூடாது என்றார்கள்.

மாயமாய் வந்த தங்கம் இப்போது மாயமாய் மறைந்தும் விட்டது. கனகாபிஷேகத்தை யொட்டி 4 கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கக்காசுகளும், 5 கோடி ரூபாய் பணமும் வசூலிக்கப்பட்டது என்றும், அவை மொத்தத்தையும் ஜூனியர் சங்கராச்சாரி சுருட்டிவிட்டார் என்றும் குற்றம் சாட்டியிருக்கிறார் நடு சங்கராச்சாரியான - ஓடுகாலி ஜெயேந்திர சரஸ்வதி.

சென்ற மாதம் கண் அறுவை சிகிச்சை செய்துகொள்ள (ஞானக் கண்ணுக்கு அல்ல, ஊனக் கண்ணுக்குத்தான்) பம்பாய் சென்றிருந்த ஜெயேந்திர சரஸ்வதி ரிசர்வ் வங்கி கவர்னர் ரங்கராசனைச் சந்தித்து இந்தக் குற்றச்சாட்டை எழுதிக் கொடுத்திருக்கிறார்.

தங்கம் சம்பந்தப்பட்ட விவகாரங்களை சோதிக்கும் அதிகாரம் ரிசர்வ் வங்கிக்கு இருப்பதால், காஞ்சி சங்கர மடத்தைச் சோதனையிட ,அது உத்திரவிட்டது. சோதனையிட வந்த அதிகாரிகளை உள்ளே அனுமதிக்க முடியாது என்று தடுத்திருக்கின்றனர் மடத்தின் பூணூல் போட்ட அடியாட்கள்.

தடைகளை மீறி மடத்தைச் சோதனையிட்டதில் முக்கியமான பல ஆவணங்கள் கைப்பற்றப் பட்டுள்ளன. மோசடிகளுக்கு ஜூனியரே காரணம் என்றும் சுருட்டிய பணத்தையெல்லாம் தன் பெற்றோர்களுக்கு அவர் அனுப்பிவிட்டதாகவும் குற்றம் சாட்டுகிறார் - நடு சங்கராச்சாரி.

மூன்றாண்டுகளுக்கு முன்பு மூத்த சங்கராச்சாரியுடன் ஏற்பட்ட தகராறில் ஜெயேந்திர சரஸ்வதி சொல்லாமல் கொள்ளாமல் மடத்தைவிட்டு ஓடியது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். பிறகு போலீசு படையும், பூணூல் படையும் நாடு பூராவும் சல்லடை போட்டு சலித்து, கர்நாடகத்திலிருந்து 'அவாளை' பிடித்து இழுத்துக் கொண்டு வந்தனர்.

இதற்கிடையே மடத்தின் கொத்துச் சாவியை ஜூனியர் கைக்கு மாற்றிக் கொடுத்துவிட்டார் கனகாபிஷேகம் கண்ட சீனியர். திரும்பி வந்த 'ஓடுகாலி' பார்ப்பன சம்பிரதாயங்களுக்கு விரோதமாக சேர்த்துக் கொள்ளப்பட்டார். ஆனால் கொத்துச் சாவி மட்டும் கைக்கு வரவில்லை. கோபத்தில் நான்தான் ஜகத்குரு என்று பிரகடனம் செய்து கொண்டார் நடு சங்கராச்சாரி. அந்த நிமிடத்திலிருந்தே பனிப்போர் முற்றத் தொடங்கியது. உலகம் வேண்டுமானால் மாயையாக இருக்கலாம் 'கொத்து சாவி' நடைமுறை உண்மையாயிற்றே.

மடத்திற்குள் இப்படியொரு குடுமிப் பிடி சண்டை நடக்காமலிருந்தால் இந்த 9 கோடி ஊழலும் வெளிவந்திருக்கப் போவதில்லை. வருவாய்த்துறை அதிகாரிகளிடம் ஆவணங்கள் சிக்கியவுடனே சீனியரின் உதவியாளர்களாக இருந்த ராதாகிருஷ்ணன், விசுவநாதன் என்ற இரு பார்ப்பனர்களை (இவர்களுக்கு வயது சுமார் 70) வெளியேற்றிவிட்டார் ஜூனியர். பங்குத் தகராறில் பலிகடா ஆக்கப்பட்ட இந்த இரண்டு பேரும் இனி மடத்திற்குள் நுழையக்கூடாது என்றும் உத்தரவிட்டு பத்திரிகை விளம்பரமும் கொடுத்திருக்கிறார்.



சங்கர மடத்தைக் கொள்ளையிட்ட ஓடுகாலி சங்கராச்சாரியும் அவரது வாரிசும்

படிப்பகம

www.padippakam.com

• புகழஞ்சலி:

# இராசகொண்ட விஸ்வநாத சாஸ்திரி: ஓர் இலக்கிய மனசாட்சி!

எழுபத்தோரு வயதான இராசகொண்ட விஸ்வநாத சாஸ்திரி மறைந்துவிட்டார். 10 நவம்பர் 93 அன்று தெலுங்கு இலக்கிய உலகம் தனது மாபெரும் இலக்கியவாதியை இழந்துவிட்டது. அவர் ஓர் நாவலாசிரியர், சிறு கதாசிரியர், நாடகாசிரியர்.

அவர் சர்க்கரை வியாதிக்காரர், சிறுநீர் பிரிக்கும் உறுப்பு சரியாக இயங்காததால் அவர் இறந்துவிட்டார். அரசுத் தரப்பிலிருந்து உதவிக்கரம் நீட்டப்பட்டபோது தேவையில்லை என்று மறுத்தார்.

ரவிசாஸ்திரி என்று அறியப்படும் நாவலாசிரியர் நாற்பதாம் ஆண்டுகளில் தனது 'அற்பஜீவி' என்ற நாவல்மூலம் புகழ் பெற்றார். இது முழுக்க முழுக்க மத்தியதர வர்க்கத்தை நையாண்டி செய்து எழுதப்பட்ட நாவலாகும். பிறகு, தொடர்ந்து நாவல்கள் எழுதினார் 'மாடுகள், ஜாக்கிரதை!' 'ராட்டுலு ராம்பாபு' 'பகக்களைக் காணவில்லை' ஆகியவை முக்கிய நாவல்கள். சாராயம் பற்றி 6 கதைகள், சோகம் பற்றி 6 கதைகள் — இரண்டும் முக்கிய சிறுகதைத் தொகுப்புகள். 'நிஜம்' இவரே எழுதி, இவரும் சேர்ந்து நடித்த நாடகம்.

விசாகபட்டினம் வட்டார வழக்கைப் பயன்படுத்தியதால் சிறப்பான பெயர் பெற்றவர். தொழில் - குற்றவியல் வழக்குரைஞர்; தொழில் காரணமாகவே, ஏராளமான திருடர்கள், விபச்சாரிகள், குடிகாரர்கள், சிறு திருட்டுக்களில் பிடிபட்ட ஏழைகள் போன்றோரை அன்றாடம் சந்தித்து வந்தார். அவர்கள் வாயிலிருந்து ஏராளமான கதைகள் எடுத்தார், ரவி. இங்கிலாந்து நாட்டின் யதார்த்தப் படைப்பாளி சார்லஸ் டிக்கன்ஸ், ரஷியாவின் யதார்த்தப் படைப்பாளி ஆண்டன் செகாவுக்கு நிகரான பாத்திரங்களை அவர் படைத்தார்.

அவரது பாத்திரங்கள் இச்சமுதாயத்தால் வீசி எறியப்பட்டார்கள்; வருத்தப்பட்டவர்கள்; "இது அவர்கள் குற்றம் அல்ல" என்பது ரவியின் வாதம். அத்தகைய பாத்திரங்களில் வெளிப்படையாகத் தோன்றும் மோசமான குணங்களின் உள்ளே ஆழ்மனத்தில் நல்ல மனிதக் குணங்கள் இருப்பதைக் கண்டு பிடித்துக் கொண்டு வந்து காட்டினார்.

1970-ல், ஆந்திராவில் புரட்சி எழுத்தாளர் சங்கம் தொடங்கியபோது இரண்டு துணைத் தலைவர்களில் ஒருவர் ரவி. அவசர நிலைக்காலத்தில் மற்ற புரட்சி எழுத்தாளர்களோடு சிறையில் அடைக்கப்பட்டார். அதற்குப்பிறகு வெளியே வந்தபோது வாழ்க்கைப் பிரச்சனைகள் அவரை முழுவதுமாக இழுத்துக்கொண்டன. அவர் ஒருவரே பெரிய குடும்பத்தைக் காப்பாற்ற நேர்ந்தது.

நக்சல்பாரி உழவர் எழுச்சி, சிரீகாகுளம் உழவர் போராட்டங்கள் மூட்டிய புரட்சித்தீ தாக்கத்தினால் இயக்கத்தில் இணைந்த அவர், இறுதிவரை அடிமட்டத்து மக்களின் இதயக்குரலாகவே இருந்தார். ரவி நேர்மையான மனிதர்; பரிசுகள் அனைத்தையும் வேண்டாம் என்று புறக்கணித்தார்; சுரண்டுபவர்களுக்காக ஒரு வரியை அவர் எழுதியதில்லை; அவர்களின் சாகித்திய அகாதமி பரிசு (மத்திய அரசு) இருமுறை அவருக்கு அறிவிக்கப்பட்டபோதும் வாங்க மறுத்தார்; ஆந்திரப் பல்கலைக் கழகம் அவருக்கு 'கலா பிரபூர்ணா' என்ற பட்டம் வழங்க முன்வந்தபோது, அதையும் மறுத்தார் ரவி. ஆள்பவரின் எந்த நிறுவனத்தின் பரிசுக்கும் கழுத்து நீட்ட இறுதிவரை அவர் மறுத்துவிட்டார்.

சொல், செயல் இரண்டிலும் ஒரு நேர்மையாளராக வாழ்ந்த தோழர் ரவியின் கலைப் பார்வை தனித்துவமானது.

—கே வி ஆர்.
(அகில இந்தியப் புரட்சிப் பண்பாட்டு மையம்)

---

மடத்தின் பணத்தைத் திருடித் தன் குடும்பத்துக்கு சொத்து சேர்த்ததாகவும், கனகாபிஷேகத் தங்கக்காசுகளைத் திருடியதாகவும் நடு சங்கராச்சாரி மீது எதிர்ப் புகார் கொடுத்திருக்கிறாராம் ஜுனியர்.

ஜுனியர் சங்கராச்சாரி எந்நேரமும் எம்.டி.வி. பார்த்துக் கொண்டிருப்பதாகவும் (சமந்தா ஃபாக்ஸின் அரை நிர்வாண நடனங்கள் உட்படத்தான்!) கிரிக்கெட் விளையாடுவதாகவும் குற்றம் சாட்டுகிறார் நடு சங்கராச்சாரி.

வீதிக்கு வந்துவிட்ட இந்த நாய்ச் சண்டையால் பீதியடைந்திருப்பவர்கள் யார் தெரியுமா? நரசிம்மராவ், சேஷன், ஆர்.வி வகையறாக்கள்தான். எம்.டி.வி. பார்ப்பதை மட்டுமாவது நிறுத்துமாறு ஜுனியரிடம் போனில் மன்றாடுகிறாராம் சேஷன்; இப்படித் தெருவில் கட்டிப் புரண்டால் மடத்தின் மரியாதை போய்விடுமே என்று கவலைப்படுகிறாராம் நரசிம்மராவ். சமாதானத் தூது போகிறார் ஆர்.வி.

அதிருக்கட்டும், அந்த 9 கோடி விவகாரம்? அதைப் பற்றி இவர்கள் யாரும் மூச்சுவிடவில்லையே! அதுதான் பார்ப்பன ஒழுக்கம் - திருடுவது தப்பில்லை; மாட்டிக் கொள்வது போலத் திருடுவதுதான் தவறு. கோஷ்டிப் பூசல் காரணமாக தவறிப் போய்க் கசிந்துவிட்ட இந்த உண்மைகளை அமுக்கி மடத்தின் மாண்பினை மீட்கும் போர்க்கால நடவடிக்கையில் மூவரும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஆன்மீகம், அத்வைதம் எல்லாம் வெறும் வாய்ச்சவடால்கள். கூடிப்பேசி பேரங்களை முடிக்கவும் கொள்ளையடிக்கவும், அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவும் பார்ப்பனக் கும்பல் நடத்திவரும் நட்சத்திர விடுதிதான் சங்கர மடம்.

நட்சத்திர விடுதி என்றால் விபச்சாரம் கட்டாயம் இருக்க வேண்டுமே என்கிறீர்களா? அதுவும் உண்டு என்று எழுதியிருக்கிறது டெல்லியிலிருந்து வெளிவரும் சண்டே மெயில் ஏடு.

காஞ்சி மடத்தில் நடக்கும் இந்த கொள்ளையைப் பற்றி டெல்லியிருந்து வரும் சண்டே மெயில் ஏடும், கல்கத்தாவிலிருந்து வரும் சண்டே வார ஏடும் வெளியிட்டிருப்பவைதான் இந்தச் செய்திகள்.

எவனோ டெல்லிக்காரன் எழுதும் செய்தியைப் பற்றி நம்மூர் 'துப்பறியும் கழுகு' ஜூ. விகடனுக்கோ, 'நடுநிலை தவறாத' துக்ளக், தினமணி ஆசிரியர்களுக்கோ, எக்ஸ்பிரஸ், இந்து ஏடுகளுக்கோ தெரியாமல் போனது எப்படி? செய்தி பொய்யாக இருந்தால் மறுத்து எழுதலாமே! காஞ்சி மடம் ஏன் மறுப்பறிக்கை கூட விடாமல் மவுனம் சாதிக்கிறது?

பங்காரு அடிகளும், மெய்வழிச்சாலையும், மகேஷ் யோகியும், சந்திரசாமி, திரேந்திர பிரம்மச்சாரி வகையறாக்களும் போலிச்சாமியார்கள் என்றும் காஞ்சிமடம் தான் மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசைகளை உண்மையிலேயே துறந்த மாமுனிவர்கள் வாழும் ஆசிரமம் என்றும் சித்தரிக்கின்ற பார்ப்பனக் கும்பலின் மோசடிக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும்.

மண்ணாசையும், பொன்னாசையும் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப் பட்டுவிட்டன; எஞ்சியிருப்பது ஒன்று மட்டும்தான் - அதுவும் விரைவில் வெளியில் வரும். அடுத்தவன் மனைவியை ஏமாற்றிப் புணர்ந்தது தானே ஆதி சங்கரனின் பாரம்பரியம்!

- பாலன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி.வல்லபேசன், 45, செங்குன்றம் சாலை, வில்லிவாக்கம், சென்னை - 600 049.
அச்சிடுபவர்: பிரேம் பிரஸ், 107, ஏ. பெரியார் பாதை (மேற்கு) சென்னை - 600 094.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

www.padippakam.com

PUTHIYA KALACHARAM R.N.42647/85 Regd No: TN/MS(S) 376



# ...ஆபத்து!... ஆபத்து!

விதைச்சது செழிக்குமுன்னு
'வெரமுகூர்த்தம்' செஞ்சவரே
செழிச்சது சேருமுன்னு
கனவு கண்டு நின்னவரே...
ஆபத்து.. ஆபத்து

விளைஞ்சதெல்லாம் திருடுனுவன்
இப்ப விதை திருட வர்றானே..

அடி உரத்தப் போட்டாக்க
அடுக்கடுக்கா விளையுமுன்னான்
அவன் 'யூரியா'வைப் போட்டாக்க
அமோக விளைச்சுலுன்னான்
''அம்மா.. தாயே'' மட்டுந்தானே
அம்மா பக்கம் வெளைச்சலாச்சு

தலைமுறையா நாமநட்ட
தங்கச்சம்பா நட்டமுன்னு
கொலைகொலையா கொட்டுமுன்னு
புதுரகத்தை போடச் சொன்னான்
கணக்கா அறுக்குறப்ப
கண்டுமுதல் காணலான்னான்
கண்டதையும் சுருட்டிகிட்டு — நம்பள
கடனாளி ஆக்கிபுட்டான்

கால்நடைக்கு உதவியின்னு
ஆடுதிருடி போன பய
கறவைமாட்டுக்கு உதவியின்னு
பால்திருடி போன பய
நாடு புகுந்து திருடுவது
என்னோட உரிமையின்னு
நாட்டாம பேசிவாரான்..
ஐயோ ஆபத்து, ஆபத்து..

களத்துமேட்டில் பொங்க வச்சி
காவல் தெய்வம் கும்பிட்டவரே
கருப்புசாமிக்கு சுருட்டு வச்சி
நேர்த்திக்கடன் செஞ்சவரே
ஆபத்து... ஆபத்து...

புகைய வைக்க புத்தில் இல்ல
கிட்டி வைக்க வரப்பில் இல்ல
பாராளுமன்றத்துல
பதுங்கிருக்குது பெருச்சாளி
நம்ம அடிவயத்தையும் அடகுவச்ச
காங்கிரசு கயவாளி

''பொங்கலோ பொங்கலு''ன்னு
பூரிக்கவும் வழியில்ல - இப்ப
''டங்கலோ டங்கலுன்னு''
உயிரெடுக்க வர்றானே
ஆபத்து... ஆபத்து..

அடிச்சி வெரட்ட வாருங்க..

• துரை. சண்முகம்

படிப்பகம்